Requisite cost of acquisition, including cost of Social Impact Assessment Study (SIA) will be deposited in your office, as provided under the provisions of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013, (Central Act 30 of 2013) and the Tamil Nadu Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Rules, 2017 as and when required by you. It is certified that the land to be acquired was demarcated on the field and all further necessary information and assistance will be provided within the time limit specified in the Act and the Rules.

Authorised Signatory
of the Requiring Body

Verified RealEstate™

APPENDIX – I

Name of the Project:-

(1) Name of the Village-

(2) Name of the Taluk-

(3) Name of the Municipality, Corporation, Village Panchayat

(4) Name of the District

(5) Survey Numbers to be acquired-

(6) Accurate extent of the land proposed for acquisition in each Survey Number (connected field map is attached)

(7) Total area under requisition (in acres/hectares/ Sq.mtrs)

(8) Classification of the lands proposed for acquisition

  (a) Wet

  (b) Dry

  (c) Manavari

  (d) Village site (Natham)

  (e) Poramboke

(9) Boundaries of the area to be acquired-

  East-

  West-

  North-

  South-

(10) Area of the agricultural and irrigated multi-cropped land

(11) Reasons for inclusion of agricultural and irrigated multi-cropped land, if any.

(12) Details of buildings and other structures, tanks, wells, trees, etc.,

(13) Reasons for the inclusion of religious building, graveyard or tomb etc., for acquisition, if any,

(14) Joint Inspection by officials concerned:

(15) Observation for acquisition (if any)

Authorised Signatory
of the Requiring Body

Verified RealEstate™

APPENDIX – II.

Name of the Project:-

1. Name of the Department or Government, Company, Local Authority or Institution:
2. Official designation of the representative of the Requiring Body authorized to sign the requisition:-
3. Purpose of Acquisition (in detail):-
4. Whether the requisition is filed by the Government for acquisition of lands for its own use, hold and control:-
5. Whether the requisition is filed for the purposes specified in clauses (a) to (f) of sub-section (1) of section 2 of the Act:-
6. Whether the requisition is filed for the purposes specified in clause (a) or clause (b) of sub section (2) of section 2 of the Act:-
7. The number of affected families as defined in clause (c) of section 3 of the Act:-
8. (i) Whether the requisition is filed under section 40 of the Act:-

   (ii) If so, on what ground?
9. (i) Has the land to be acquired already been taken over from the owners by private negotiation?

   (ii) If so, on what date and on what terms? (please state the terms of negotiation in short and attach the copy of it)
10. Date of issue of administrative approval for the project (copy to be attached)
11. Reasons for delay in filing requisition, if requisition is filed after 6 weeks from the date of administrative approval of the project
12. By what time possession of the land is required

Authorised Signatory
of the Requiring Body

Verified RealEstate™

APPENDIX – III.

CERTIFICATION TO BE FURNISHED ALONG WITH THE REQUISITION FOR ACQUISITION OF LAND BY THE REQUIRING AUTHORITIES.

Name of the Project:-

(1) Certified that the project for which the land is sought to be acquired has been administratively approved *vide* Department letter No:————————————————-Dated ————————————————for acquisition under the Act.

(2) The estimated cost of the project is of Rs.————————————————-and necessary budget has been sanctioned and funds are available towards cost of acquisition.

(3) The Department undertakes to pay the full amount of compensation in case of revision of compensation as per decree / judgments of the Land Acquisition, Rehabilitation and Resettlement Authority / High Court / Supreme Court, as and when asked to do so by the District Collector.

Authorised Signatory
of the Requiring Body

Verified RealEstate

FORM–II

[*see* rule 12 (e)]

PRIOR WRITTEN CONSENT / DECLARATION FORM BY THE AFFECTED FAMILY

Photo of the Signatory

Serial No.	**Details of person Concerned**		
(1)	Name of the person(s) in whose name the land is registered		
(2)	Name of the spouse:		
(3)	Name of father / mother:		
(4)	Address:		
(5)	Village / Hamlet		
(6)	Village Panchayat / Town Panchayat / Municipality / Municipal Corporation		
(7)	Taluk:		
(8)	District:		
(9)	Name of other members in the family with age: (including children and adult dependents)		
(10)	Extent of land owned:		
(11)	Area under acquisition		
(12)	Plot No.		
(13)	Record of Rights		
(14)	Disputed lands, if any		
(15)	Pattas / lease / grants, if any		
(16)	Any other right, including tenancy, if any		
(17)	Regarding the acquisition of my land by the Government, I wish to state the following	(please circle one of the below)	
	(i) I have read / read out the contents of this consent form and explained to me in ——— language.	Yes	No
	(ii) I agree to this acquisition	Yes	No
		Signature / Thumb impression of the affected family (s) and date:	

Verified RedEstate™

(18)	The terms and conditions, Rehabilitation and Resettlement, compensation and other measures committed by the Requiring Body have been explained to the affected family in the local language. (These terms and conditions must be attached to the Form.)
Date, Seal and Signature of the representative of the Requiring Body	Date and Signature of designated district official receiving the signed Form
NOTE	It is a crime to threaten any person or to cause them any harm if they refuse to consent or if they choose to state that they do not consent on this Form. This includes any threat or act that causes them to lose money, that hurts them physically or that results in harm to their family. If any such threat has been made, this Form is null and void.

Signature of

Witness:

Verified RedIEstate

FORM–III

[*see* rule 12(n)]

GRAM SABHA RESOLUTION.

We, the undersigned members of ————————- Gram Sabha within ———————— Panchayat of ————————- taluk in ————————- district wish to state that the following certification is based on the information supplied by the administration and officials. If this information is incomplete or incorrect or if any consent has been obtained through any use of threats, fraud or misrepresentation, it is null and void. On this basis, this Gram Sabha hereby certifies that it CONSENTS / REFUSES TO CONSENT to the proposed acquisition of land for ———————— project, which will involve:

(a) acquisition of ————————————-acres of private land *

(b) transfer of ————————————acres of government land to the project *

(c) transfer of ————————————-acres of forest land to the project *

The terms and conditions of compensation, rehabilitation and resettlements benefits and social impact mitigation measures agreed to by the Requiring Body–(state the name) as attached are agreed to by us * /not agreed to by us.*

(* strike out whichever is not applicable).

The Gram Sabha also states that any consent is subject to the condition that all of its residents shall be given title of their individual and community rights over forests and forest lands, including their titles for forest land that they have been cultivating, ownership titles for all forms of minor forest produce that they use, and titles to protect and manage their community forests.

Date and signatures / thumb impressions of Gram Sabha members

Date and Signature of designated district officer receiving the Resolution.

Verified RedEstate

FORM IV

[*see* rule 13 (1)]

PRELIMINARY NOTIFICATION.

No._____ Dated_____

Whereas it appears to the appropriate Government that a total of_____ hectares of land is required in the _____ Village in _____ Taluk / Block (as applicable) in _____ District for public purpose, namely ,_____. Social Impact Assessment Study was carried out by Social Impact Assessment Agency and a report submitted / preliminary investigation was conducted by a team constituted by Collector as laid down under rule 4. The summary of the Social Impact Assessment Report / preliminary investigation is as follows:-

_____ .(copy of SIA report is attached herewith)

A total of _____ (in number) families are likely to be displaced due to the land acquisition. The reasons necessitating such displacement are given below:-

_____ is appointed as Administrator for the purpose of rehabilitation and resettlement of the affected families. Therefore, it is notified that for the above said project in the _____ Village of _____ Taluk / Block (as applicable) in _____District, land measuring an extent of _____ hectares, whose details are specified in the Schedule below, is under acquisition:

THE SCHEDULE

Sl. No.	Survey No.	Classi-fication of land	Area under acquisi-tion	Boundaries				Structures	Trees	Name & address of person inter-ested	Registered holder
				N	E	S	W				
(1)	(2)	(3)	(4)	(5)				(6)	(7)	(8)	(9)

This notification is made under sub-section (1) of section 11 of the Right to Fair Compensation and Transparency in Land acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013), to all whom it may concern.

A plan of the land may be inspected in the office of the Collector and ————————- on any working day during the working hours.

The Government is pleased to authorize _____ and his staff to enter upon a survey land, take levels of any land, dig or bore into the sub-soil and do all other acts required for the proper execution of their work as provided and specified in section 12 of the said Act.

Under sub-section (4) of section 11 of the said Act, no person shall make any transaction or cause any transaction of land i.e. sale / purchase, etc., or create any encumbrances on such land from the date of publication of this notification in the Tamil Nadu Government Gazette without prior approval of the Collector.

Objections to the acquisition, if any, may be filed by the person interested within 60 (sixty) days from the date of publication of this notification in the Tamil Nadu Government Gazette as provided under section 15 of the said Act before the Collector.

* Since the land is urgently required under sub-section (1) of section 40 of the said Act / urgently required for the project involving defence of India / National Security / Emergencies arising out of Natural Calamities / emergency with the approval of Parliament (Strike off what is not applicable) under sub-section (2) of section 40 of the said Act, it has been decided not to carry out the Social Impact Assessment Study, vide G.O. No._____,_____, dated_____.

Enclosure: As above

Place:

Date: **Collector**

* Strike out if not applicable.

Verified RedEstore™

Form–V

[*see* rule 14(1)]

NOTICE BY COLLECTOR

No. ————————————- Dt. ————————————

Notice is hereby given that the land specified in the Schedule below and situated in the _____ village in _____ Taluk / Block in _____ District is needed or is likely to be needed in accordance with the preliminary notification issued under sub-section (1) of section 11 of the Right to Fair Compensation and Transparency in Land acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013), published at page _____ of Part _____ of the Tamil Nadu Government Gazette dated the _____. All persons interested in the land are accordingly requested to file their objections before _____ within sixty (60) days from the date of publication of the above preliminary notification, a statement in writing of their objection,————————————- if any, to the acquisition of the said land.

Any objection, which is received after the due date or which does not clearly explain the nature of the senders interest in the lands, is liable to be summarily rejected.

Objections received within the due date, if any, will be enquired into on _____ at _____ when the objector will be at liberty to appear in person or by advocate and to adduce any oral or documentary evidence in support of their objections.

THE SCHEDULE

Sl. No.	Survey No.	Total area in hectares	Area in hectares under acquisition	Name and address of the person Interested / Registered holder	Boundaries				Details of trees, structures etc., if any
					N	E	S	W	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)				(7)

Place :

Date :

Collector

Verified RedEstate™

FORM VI

[*see* rule 16]

DECLARATION

No:_____ Date_____.

Whereas, it appears to the Government that a total of _____ hectares of land is required in the _____ Village in _____ Taluk / Block (as applicable) in _____ District for a public purpose, namely, in _____ _____

Now, therefore, a declaration is made hereby that a piece of land measuring _____ hectares is under acquisition for the above said project in the _____ Village in _____ Taluk / Block (as applicable) in _____ District whose detailed description is as follows:

Sl. No.	Survey No.	Type of title	Type of land	Area under acquisi-tion (in hectare)	Name and address of person intere-sted	Boundaries				Trees		Structures	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)				(8)		(9)	
						N	E	S	W	Variety	Number	Type	Plinth area

This declaration is made after hearing of objections of persons interested and due enquiry as provided under section 15 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013). The number of families likely to be resettled due to land acquisition is _____ for whom resettlement area has been identified, whose brief description is as follows:-

Survey Number of Lands _____.

Village_____Taluk / Block (as applicable) _____ District _____ Area _____ (in hectares).

Mines of coal, iron-stone, slate or other minerals lying under the said land or any particular portion of the said land, except such parts of the mines and minerals which may be required to be dug or removed or used during the construction phase of the project for the purpose of which the land is being acquired, are not needed.

A plan of the land may be inspected in the office of the Land Acquisition Officer and _____on any working day.

A summary of the Rehabilitation and Resettlement Scheme is appended.

Enclosure: As above Collector.

Verified RedEstate™

FORM VII

[see rule 18]

LAND ACQUISITION AWARD

Land Acquisition file No. / Award No. Date :

1. Name of the Project :

2. Number and date of declaration under which the land is to be acquired

3. Situation and extent of the land in hectares, the number of field plots on the survey map, the village in which the land is situated, with the number of mile plan, if any.

4. Description of the land, i.e., whether fallow, cultivated, homestead, etc. If cultivated, how cultivated, and the source of irrigation;

5. Names of persons interested in the land and the nature of their respective interests;

6. Amount allowed for the land itself, without trees, buildings etc., if any;

7. Amount allowed out of such sum as compensation for the tenants interested in the land;

8. Basis of calculation:

9. Amount allowed for trees, houses or any other immovable property;

10. Amount allowed for crops;

11. Additional compensation on the market value under sub-section (3) of section 30 of the Act;

12. Damage, if any, sustained to the person interested as specified under section 28 of the Act;

13. Solatium under sub-section (1) of section 30 of the Act;

14. Total of amounts ;

Sl. No.	Area of land for apportionment of compensation (in hectares)	Survey No. Boundaries				Name of claimants	Document produced to prove the claim	Amount payable to each claim-ant	Bank A/c No.	Remarks
(1)	(2)	(3)				(4)	(5)	(6)	(7)	(8)
		N	S	E	W					

15. Date on which possession was taken under sub-section (1) of section 38 or sub-section (1) of section 40 of the Act;

16. If possession was taken under sub-section (1) of section 40, the number and date of the order of the appropriate Government giving directions to do so.

Date

Signature
Land Acquisition Officer.

Verified RealEstate™

FORM NO. VIII

[*see* rule 18]

AWARD FOR REHABILITATION AND RESETTLEMENT

Land Acquisition File No.

Award No. Date :

1. Name of the Project

2. No. and date of declaration under which the land is to be acquired

3. Situation and extent of the land in hectares, the number of field plots on the survey map, the village in which the land is situated, with the number of mile plan, if any.

4. Description of housing units, transportation cost, housing allowance, annuity, employment subsistence grant, cattle shed, petty shop, one time resettlement allowance, etc.,

5. Names of person interested in the land and the nature of their respective claim for Rehabilitation and Resettlement.

6. Apportionment of the amount of compensation (in hectares)

Sl. No.	Name of the Claimants / affected family	Rehabilitation and Resettlement entitlements	Bank account No.	Amount payable to each claimant/ affected family	Non-monetary limit	Remarks
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
		1. House to be allotted 2. Land to be allotted 3. Offer for developed land 4. Annuity / employment 5. Subsistence grant 6. Transportation cost /housing allowance 7. Cattle shed / Petty shop 8. One time grant to artisans / small traders / certain others 9. Fishing rights 10. One time resettlement allowance 11. Stamp duty and registration fee				

Collector

District:

DR. CHANDRA MOHAN. B,
Secretary to Government.

Verified by RedEstate™

இணைப்பு

அறிவிக்கை

2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 30/2013) 112ம் பிரிவின் கீழ் முன்னர் வெளியிடப்பட்ட வரைவு விதிகளை தொடர்ந்து இச்சட்டத்தின் 109ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பின்வரும் விதிகளை இதனால் இயற்றுகிறார்.

விதிகள்

அத்தியாயம் 1

பொது

1. குறுந்தலைப்பு, பொருந்தும் தன்மை மற்றும் தொடக்கம்.– (1) இந்த விதிகள் 2017ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை விதிகள் எனப் பெயர் பெறும்.

(2) இது, தமிழ்நாடு முழுவதற்கும் பொருந்தும்.

(3) இது, 21 செப்டம்பர் 2017 ஆம் நாளன்று செயலுக்கு வரும்.

2. சொற்பொருள் விளக்கங்கள்.– இந்தவிதிகளில், சந்தர்ப்பம் வேறுபொருள் குறித்தாலன்றி மற்றபடி–

(a) "சட்டம்" என்பது 2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டம் (மத்தியச் சட்டம் 30/2013);

(b) "நிருவாகி"* என்பவர் திட்டப்பணி ஒன்றை பொறுத்த வரையில், இச்சட்டத்தின் 43ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ், அறிவிக்கை வாயிலாக, மாநில அரசால் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான நியமனம் செய்யப்பட்ட நிருவாகி எனப் பொருள்படும்;

(c) "உரிய அரசு"** என்பது மாநில அரசால் அறிவிக்கையிடப்படுகிற பகுதிக்கு மிகாமல் மக்கள் பயன்பாட்டிற்காக நிலத்தை கையகப்படுத்துவது குறித்த நேர்வில் வருவாய் மாவட்டத்தின் ஆட்சியர் உட்பட தமிழ்நாடு மாநிலத்தின் ஆட்சிப் பகுதிக்குள் அமைந்துள்ள நிலத்தைகையகப்படுத்துவது தொடர்பான மாநில அரசு என்று பொருள்படும்;

(d) "ஆட்சியர்" என்பவர் வருவாய் மாவட்டத்தின் ஆட்சியர் எனப் பொருள்படும். இச்சட்டத்தின் கீழ் ஆட்சியரின் பணிகளை மேற்கொள்வதற்கு உரிய அரசால் தனியாக நியமிக்கப்பட்ட வட்டாட்சியர் பதவித்தரத்திற்கு குறையாதயாதொரு அலுவலரும் இதில் அடங்குவர்.

(e) "மேம்பாட்டுத் திட்டம்" என்பது இச்சட்டத்தின் 41ஆம் பிரிவைச் சேர்ந்த (4) மற்றும் (5)ஆம் உட்பிரிவுகளின் கீழ், கோருகின்ற அமைப்பின் சார்பில் தயாரிக்கப்பட்ட ஒரு திட்டம் எனப் பொருள்படும்;

(f) "படிவம்" என்பது இத்தகைய விதிகளில் இணைக்கப்பட்டுள்ள படிவங்கள் எனப் பொருள்படும்;

(g) "உள்ளாட்சி அமைப்புகள்" என்பது அந்தந்த சட்டங்களின் கீழ் ஏற்படுத்தப்பட்ட அல்லது நிறுவப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் எனப் பொருள்படும்;

(h) "பிரிவு" என்பது இச்சட்டத்தின் பிரிவு என்று பொருள்படும்;

(i) "SIA முகவரமைப்பு" என்பது திட்டப்பணியை பொறுத்த நேர்வில், சமூக தாக்கமதிப்பீடு ஆய்வினை மேற்கொள்ளவும் சமூகதாக்க மேலாண்மை திட்டத்தைத் தயாரிக்கவும், விதி 7ன்கீழ் தமிழ்நாடு சமூகதாக்க மதிப்பீடு அலகினால் நியமிக்கப்பட்டஒரு முகவரமைப்பு எனப் பொருள்படும்;

(j) "சமூக தாக்க மதிப்பீடு" அல்லது "SIA" என்பது இச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு எனப் பொருள்படும்;

(k) "சமூக தாக்க மேலாண்மைத் திட்டம்" என்பது இச்சட்டத்தின் 4ஆம் பிரிவைச் சேர்ந்த (6)ஆம் உட்பிரிபின் கீழ், சமூக தாக்க மதிப்பீடு செய்முறையின் பகுதியாக தயாரிக்கப்பட்ட திட்டம் எனப் பொருள்படும் ;

(l) "மாநில அரசு" மற்றும் "அரசு" என்பது தமிழ்நாடு அரசு எனப் பொருள்படும்;

(m) "TNSSIA அலகு" என்பது விதி 7ஆம் விதியின் கீழ் மாநில அரசால் நிறுவப்பட்ட தமிழ்நாடு மாநில சமூக தாக்க மதிப்பீடு அலகு எனப் பொருள்படும்;

(n) "நகர்ப் புறப்பகுதி" *** என்பது,–

---

* அரசாணை (நிலை) எண். 302 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

** அரசாணை (நிலை) எண். 299 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

*** இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் வரிசை எண். 3–ல் குறிப்பிட்டுள்ளவாறு.

Verified GreenEstate ™

(i) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும் பகுதி (கிராம ஊராட்சிகள் உட்பட)

(ii) 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 5 இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்டுள்ள மாநகராட்சிகள், (சென்னை மாநகராட்சி நீங்கலாக அதாவது மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகள்) மற்றும் இத்தகைய மாநகராட்சியின் எல்லையிலிருந்து 8 கிலோமீட்டர் தொலைவிற்குள் அமைந்த பகுதி (கிராம ஊராட்சி உட்பட) ;

(iii) ஏனைய அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், பாளையங்கள் மற்றும் நகரியங்கள்;

(iv) அவ்வப்போது மாநில அரசால் நகர்புற பண்பினை கொண்டுள்ளதாக அறிவிக்கையிடப்படக் கூடிய ஏனைய யாதொரு பகுதி;

(2) இந்த விதிகளில் பொருள் விளக்கம் அளிக்கப்படாமல் ஆனால் இச்சட்டத்தில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்ட சொற்கள் அல்லது சொற்றொடர்கள், சட்டத்தில் அவற்றுக்கு அளிக்கப்பட்ட அந்தந்த பொருள் விளக்கத்தை கொண்டிருக்கும்.

அத்தியாயம் II

நிலம் கையகப்படுத்துவதற்கான கோரிக்கை

3. நிலம் கையகப்படுத்துவதற்கான கோரிக்கை.– (1) யாதொரு பொது நோக்கத்திற்காக, யாதொரு பகுதியில் உள்ள நிலம் தேவைப்படுகிற போது அல்லது தேவைப்படலாம் என்ற நேர்வில், யாருக்காக நிலம் கையகப்படுத்தப்பட வேண்டியிருக்கிறதோ அந்த கோருகின்ற அமைப்பு அல்லது அதன் ஏற்பளிக்கப் பெற்ற பிரதிநிதி, சம்பந்தப்பட்ட ஆட்சியரிடம், படிவம்–Iல் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டும். அவை பின்வருமாறு.–

(i) விரிவான திட்ட அறிக்கை

(ii) திட்டத்தின் ஒப்பளிப்பு கடிதம்.

(iii) உரிமை பதிவுருக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளின் வருவாய் வரைபடங்களின் மூன்று நகல்கள்;

(iv) நிலத்தின் வகைப்பாடு அதாவது பாசனநிலம், பல்வகை பயிர்கள் விளையக் கூடிய நிலம், ஒரே வகையான பயிர் விளையக் கூடிய நிலம், தரிசு நிலம் போன்றவைக் குறித்த தகவல்

(v) ஆட்சியரால் கோரப்படும் யாதொரு ஏனைய தகவல்

(2) துணை விதி (1) –இன் கீழ் ஆட்சியரிடம் அளிக்கப்பட்ட கோரிக்கையின் நகல் ஆணையருக்கும்* அளிக்கப்பட வேண்டும்.

(3) கோருகின்ற அமைப்பு அரசாக இருக்கின்ற நேர்வில், சம்பந்தப்பட்ட துறையின் செயலாளரால் கோரிக்கை அளிக்கப்பட வேண்டும். பொதுத்துறை நிறுவனமாக இருக்கும் நேர்வில், அத்தகைய நிறுவனத்தை நிருவகிக்கின்ற துறையின் செயலாளரால், கோரிக்கை அளிக்கப்பட வேண்டும்.

4. கோரிக்கை பெற்றதன் பேரில் ஆட்சியரால் எடுக்கப்படும் நடவடிக்கை.– (1) (a) விதி 3–ன் துணை விதி (1)–ன்கீழ் அளிக்கப்பட்ட கோரிக்கையை பெற்றதன் பேரில், ஆட்சியர் பின்வருபவை தொடர்பாக தொடக்க விசாரணையை மேற்கொள்வதற்கு, கோருகின்ற அமைப்பின் பிரதிநிதிகளுடன் கலஆய்வினை மேற்கொள்வது அவசியம் எனக் கருதுவதன் பேரில், வருவாய் (ம) «ðKi˜ «ñô£‡¬ñˆ துறை, வேளாண்மைத்துறை, வனத்துறை, பொதுப்பணித்துறை அல்லது ஏனைய யாதொரு துறையில் உள்ள அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றினை அமைப்பார்;–

(i) இருப்பில் உள்ள தரிசு மற்றும் வறண்ட நிலம்

(ii) விதி 3–ன் துணை விதி (1)–ன்கீழ் அளிக்கப்பட்ட கோரிக்கையில் அளிக்கப்பட்ட விவரங்களின் சரிநிலை

(iii) திட்டத்திற்கு தேவைப்படும் குறைந்தளவு வெற்று நிலம்

(iv) சட்ட விதித் துறைகளுக்கேற்ப கோரிக்கை உள்ளதா என குழு உறுதி செய்து ஆட்சியருக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்.

(b) மேற்சொன்ன (a) பகுதியில் குறிப்பிடப்பட்ட குழுவின் அறிக்கையில் பின்வருபவை சேர்க்கப்படும். அவையாவன ;–

(i) கையகப்படுத்தப்படவுள்ள நிலம் பொது பயன்பாட்டிற்கு ஏற்றதா ?

(ii) கையகப்படுத்தப்படவுள்ள நிலப்பரப்பு, திட்டத்திற்காக தேவைப்படும் குறைந்தளவு நிலமா ?

(iii) நிலம் கையகப்படுத்துவதற்கு முன் மாற்று இடம் கண்டறியப்பட்டு அது சாத்தியமில்லை என தெரிய வந்ததா ?

(iv) திட்டப்பகுதியில் முன்னதாக கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாத நிலம் ஏதேனும் உள்ளதா ?

* அரசாணை (நிலை) எண். 304 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

Verified RealEstate™

(v) முன்னதாக கையகப்படுத்தப்பட்ட நிலம் ஏதேனும் இருந்து, பயன்படுத்தப்படாமல் இருந்தால், அந்நிலத்தை திட்டத்திற்காக பயன்படுத்திக் கொள்ளலாமா ?

(vi) குழுவின் பரிந்துரைகள்

(2) (a) ஆட்சியர், துணைவிதி (1)–ல் குறிப்பிடப்பட்ட குழுவின் அறிக்கை, அவரிடமுள்ள ஏனைய தகவல் மற்றும் இது குறித்து மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட அறிவுரைகள் அடிப்படையில், சட்டத்தின் விதித்துறைகளுக்கு ஒத்திசைவாக கோரிக்கை உள்ளது என அவர் மனநிறைவடையும் நேர்வில், 3ஆம் பிரிவின் பகுதி (i)–ல் வரையறுக்கப்பட்டவாறு நிலம் கையகப்படுத்தும் செலவின் ஆரம்ப மதிப்பீட்டினை அவர் மேற்கொள்வார்.

(b) இச்சட்டத்தின் 3 ஆம்பிரிவின்பகுதி (i)–ன் உட்பகுதி (vi) இன் இனம் (A) –இல் வரையறுக்கப்பட்ட நிருவாகச் செலவினம், அவ்வப்போது உரிய அரசால் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, இழப்பீட்டுத் தொகை சதவீதத்திற்கு மேற்பட்டிருக்கக்கூடாது.

(c) ஆட்சியர், சட்டத்தின் 19–ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் விளம்புகை அறிவிக்கை வெளியிடுவதற்கு முன்னர், அவரால் குறிப்பிடப்பட்ட அத்தகைய காலத்திற்குள் கையகப்படுத்தும் நிலத்தின் மதிப்பீட்டுத் தொகையை அல்லது பகுதியை மாநில அரசால் இந்த நோக்கத்திற்கான குறிப்பிடப்பட்ட கணக்கில் வைப்பீடு செய்யுமாறு கோருகின்ற அமைப்பிடம் தெரிவிக்க வேண்டும். கோருகின்ற அமைப்பு தொகையை மேற்சொன்ன காலத்திற்குள் வைப்பீடு செய்யவேண்டும்.

(3) ஆட்சியரால் இறுதி மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னர், நிலம் கையகப்படுத்தலுக்கான எஞ்சிய தொகையை, கோருகின்ற அமைப்பு வைப்பீடு செய்ய வேண்டும். ஆணையம் அல்லது நீதிமன்றத்தால் மிகையான தொகை வழங்கப்படுகின்ற நேர்வுகளில், தேவைப்படும் போது அத்தொகை வைப்பீடு செய்யப்பட வேண்டும்.

5. அவசர கால வழிவகைகளின் கீழ் கையகப்படுத்துதல் மற்றும் சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்விலிருந்து விலக்களித்தல்– இச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் கீழ் அவசரகால வழிவகைகளை பயன்படுத்தி யாதொரு நிலம் கையகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டு, அவ்வாறு உடனடியாக செய்யப்பட வேண்டும் என கருதப்படுமாயின், மாவட்ட ஆட்சியர், அவர் உரிய அரசாக இல்லையெனில், உரிய உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு மாநில அரசிடம் அறிக்கை ஒன்றை அவர் அளிக்க வேண்டும். ஏனைய நேர்வுகளில், மாவட்ட ஆட்சியரால் முடிவு எடுக்கப்பட்டு உரிய ஆணைகள் வெளியிடப்படும்.

அத்தியாயம்– III

சமூகத் தாக்க மதிப்பீடு

6. சமூகத் தாக்க மதிப்பீடு ஆய்வு.– சமூகத் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்ள, இச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட வேண்டியுள்ள அறிவிக்கையில் கீழ்குறிப்பிடப்பட்டவாறான, விவரங்கள் சேர்க்கப்படும்.:

(a) திட்ட மேம்பாட்டாளரின் பெயர், திட்டப்பணியின் சுருக்கக்குறிப்பு, கையகப்படுத்தப்படவுள்ள நிலத்தின் பரப்பளவு, திட்டப்பணியின் பரப்பளவு மற்றும் சமூகத்தாக்க மதிப்பீட்டு ஆய்வில் பாதிக்கப்படும் பகுதிகள்

(b) சமூகத்தாக்க மதிப்பீட்டு ஆய்வின் பிரதான நோக்கங்கள் மற்றும் ஆலோசனைகள், பொது ஆய்வு, பொது விசாரணை போன்ற முக்கிய நடவடிக்கைகள்

(c) கிராம சபைகள் மற்றும் / அல்லது நிலஉரிமையாளர்களின் ஒப்புதல் தேவைப்படுமாயின் அல்லது தேவைப்படாதிருப்பின்;

(d) சமூகத்தாக்க மதிப்பீட்டு ஆய்வின் கால அளவு மற்றும் வெளிப்படுத்துதல் முறையின் (சமூகத்தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் சமூகத்தாக்க மேலாண்மைத்திட்டம்) இறுதி ஒப்படைப்பு

(e) தமிழ்நாடு மாநில சமூகத்தாக்க மதிப்பீடு ஆய்வு அலகு தொடர்பு பற்றிய தகவல்கள்

ஆனால், கோருகின்ற அமைப்பின், தகுதி வாய்ந்த அதிகாரியால் நிதி இருப்பிற்கான தெளிவான உறுதிமொழியுடன் அத்தகைய நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான நிருவாக ஒப்பளிப்பு ஆணையை கோருகின்ற அமைப்பு அளித்தாலன்றி, அத்தகைய அறிவிக்கை எதுவும் வெளியிடப்படமாட்டாது:

மேலும், உரிய அரசு கோருகின்றவாறாக, சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வு தொடர்பான செலவுத் தொகை மற்றும் ஏனைய யாதொரு செலவுத் தொகையை கோருகின்ற அமைப்பு வைப்பீடு செய்திருந்தாலன்றி, அத்தகைய அறிவிக்கை எதுவும் வெளியிடப்படமாட்டாது.

ஆனால், உரிய அரசால் நிர்ணயித்தவாறாக, கோருகின்ற அமைப்பால் சமூகத் தாக்க மதிப்பீடு ஆய்வு தொடர்பான செலவுத் தொகை வைப்பீடு செய்யப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய அறிவிக்கை வெளியிடப்படும்.

7. தமிழ்நாடு மாநில சமூகத் தாக்க மதிப்பீடு அலகு:– **(TNSSIA Unit)** மாநில அரசு, மாநில சமூகத் தாக்க மதிப்பீடு அலகு என்றழைக்கப்படுகின்ற (இனிமேல் தமிழ்நாடு மாநில சமூகத் தாக்க மதிப்பீடு அலகு என்றழைக்கப்படும்) அமைப்பினை ஏற்படுத்தும் அல்லது கண்டறியும். இச்சட்டத்தின் விதித்துறைகள் மற்றும் விதிகளின்படி, சம்பந்தப்பட்ட சமூகத் தாக்க மதிப்பீடு முகவரமைப்பால் சமூகத் தாக்க மதிப்பீடு ஆய்வுகள் தொடங்கப்பெற்று நடத்தப்படுவதை இந்த அமைப்பு உறுதி செய்வதற்கு பொறுப்பு வகிக்கும். மாநில சமூகத் தாக்க மதிப்பீடு அலகானது ஆணையரின் *ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும்.

* அரசாணை (நிலை) எண். 304 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

8. சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வு முகவரமைப்புகளை வரிசைப் பட்டியலில் சேர்த்தல்:– தமிழ்நாடு சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வு அலகு, சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், இச்சட்டத்தின் கீழ் சமூகத் தாக்க நிருவாகத் திட்டத்தை தயாரிப்பதற்கும், சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வு முகவரமைப்புகளாக, வரிசைப் பட்டியலில் சேர்ப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பெயர் பெற்ற அமைப்புகளின் துறைகளிலிருந்து விண்ணப்பங்களை வரவேற்கும். விண்ணப்பதாரர்களின் திறன்கள், தகுதிகள் மற்றும் அனுபவத்தை ஆய்வு செய்த பின்னர், தகுதியான சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்புகளின் மாநில தரவுத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கு ஏதுவாக, தமிழ்நாடு சமூகத்தாக்க மதிப்பீட்டு ஆய்வு அலகு, தகுதி வாய்ந்த விண்ணப்பதார்களை, சமூகத்தாக்க முகவரமைப்புகளாக்குவதற்கு வரிசைப் பட்டியலில் சேர்க்கும். சமூகத்தாக்க மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு சமூகத்தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பை தெரிவு செய்வதில், கோருகின்ற அமைப்பு எந்த வழியிலும் ஈடுபடக்கூடாது.

9. திட்டப்பணி–சமூகத்தாக்க மதிப்பீட்டிற்கான குறிப்பிட்ட ஆய்வு வரம்புகள் மற்றும் நடைமுறைக் கட்டணம்.– (1) நிலம் கையகப்படுத்துவதற்கு உரிய அரசால்* கருதப்படும் நேர்வுகளில், சமூகத்தாக்க மதிப்பீடு அலகிற்கு தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடன், அத்தகைய நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான செயற்குறிப்பு அனுப்பிவைக்கப்படும்.

(2) நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான செயற்குறிப்பினை பெற்றதன் பேரில், சமூகத்தாக்க மதிப்பீட்டு அலகு பின்வருவனவற்றை மேற்கொள்ளும்:–

(a) நிலத்தை கையகப்படுத்தும் ஒவ்வொரு கருத்துருவிற்கும் குறிப்பிட்ட திட்டவட்டமான ஆய்வு வரம்பினை (இனிமேல் ToR என்றழைக்கப்படும்) தயாரித்துக் கீழ்கண்ட விபரங்கள் சேர்க்கப்படும், அவையாவன–

(i) திட்டப்பணி, திட்டப்பரப்பளவு மற்றும் கையகப்படுத்தலுக்கான நிலத்தின் அளவு பற்றிய சுருக்க விவரம்

(ii) சமூகத்தாக்க மதிப்பீட்டிற்கான ஆய்வின் நோக்கங்கள் மற்றும் சமூகத்தாக்க மதிப்பீட்டுக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்;

(iii) நிலக்கையகப்படுத்தல் மற்றும் திட்டத்தின் அளவு மற்றும் சிக்கல்களைப் பொறுத்து, சமூகத்தாக்க மதிப்பீட்டு செய்முறைக்காக வரிசைமுறை, அட்டவணை மற்றும் ஒப்படைத்தலுக்கான கடைசி நாளுக்கான கால அளவு.

(iv) கிராம சபைகளின் மற்றும் / அல்லது நில உரிமையாளர்களின் இசைவு கோரப்படுவது அவசியமா ?

(v) திட்டத்திற்கான சமூகத்தாக்க மதிப்பீட்டு ஆய்விற்கு தேவையான (தேவையெனில் நில அளவையாளர் உட்பட) சமூகத்தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பின் குழு விவரம், தகுந்த அளவு மற்றும் எண்ணிக்கை

(vi) ஒவ்வொரு இனம்/செயல்பட்டிற்கான தெளிவான தனித்தனி செலவுத்தொகை விவரங்களுடன் ஆய்வு வரம்பு அடிப்படையிலான திட்டப்பணியை அடிப்படையாகக்கொண்ட குறிப்பிடத்தக்க நிதிநிலை திட்டம்; மற்றும்

(vii) சமூகத்தாக்க மதிப்பீட்டு செயல்முறையில் சமூகத்தாக்க மதிப்பீட்டு முகவரமைப்புக்கு நிதிகள் வழங்க வேண்டியதற்கான அட்டவணை

(b) ஒவ்வொரு இனம் அல்லது நடவடிக்கைக்கான தெளிவாக தனித்தனி செலவுத் தொகையுடன் ஆய்வு வரம்பு அடிப்படையில் சமூகத்தாக்க மதிப்பீட்டு கட்டணத்தினை தயார் செய்யும். மாநில அரசால் அவ்வப்போது குறிப்பிடப்படும் அத்தகைய பகுதி, திட்டத்தின் வகை மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை, பயன்படுத்தப்பட்ட வளங்கள் போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் கட்டணத்தொகை இருக்கும்.

(3) திட்டவட்டமான ஆய்வு வரம்பினை தயாரித்து அளிப்பதற்காக சமூகத்தாக்க மதிப்பீட்டு அலகிற்கு செலுத்தத்தக்க நடைமுறை கட்டணம், சமூகத்தாக்க மதிப்பீட்டு கட்டணத்தின் 10 சதவீத அளவில் இருக்க வேண்டும்.

(4) கோருகின்ற அமைப்பு, இந்த செயல் நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்ட அட்டவணையிடப்பட்ட வங்கியில் உரிய அரசின் கணக்கில் நடைமுறைக் கட்டணத்துடன் சமூகத்தாக்க மதிப்பீட்டு கட்டணத்தையும் வைப்பீடு செய்யவேண்டும்.

10. சமூகத் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான செயல்முறை.–

(1) பெறப்பட்ட ஆய்வு வரம்புகளின் அடிப்படையில், தமிழ்நாடு மாநில சமூகத் தாக்க மதிப்பீட்டு அலகு, தமிழ்நாடு 1998 ஆம் ஆண்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 43/1998) வரையறுக்கப்பட்டுள்ள விதித்துறைகளின்படி, ஒரு திட்டப்பணி குறித்த சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்வதற்கான, சமூகத் தாக்க ஆய்வு முகவரமைப்பினை, 8 ஆம் விதியில் குறிப்பிட்டுள்ளவாறு, அங்கீகரிக்கப்பட்ட முகவரமைப்புகளிலிருந்து, தகுதிவாய்ந்த முகவரமைப்பு ஒன்றினை தேர்வு செய்து நியமிக்கும்.

(2) அவ்வாறு நியமிக்கப்பட்ட சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பானது, சமூகத் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை தயார் செய்வதில் பல்வேறு அளவு மற்றும் தரத்திலான தரவினை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், விரிவான களப்பார்வை மேற்கொள்ளுதல், பங்கேற்கும் முறை, மதிப்பீட்டு தொழில்நுட்பங்கள், தொடர்புடைய ஏனைய தொழில் நுட்பங்கள் மற்றும் முறைகளை பயன்படுத்த வேண்டும்.

(3) சமூகத் தாக்க மதிப்பீட்டின் போது, தொடர்புடைய திட்டப்பணி அறிக்கைகள் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகள் அனைத்தும் சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்புக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும். சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பு

* அரசாணை (நிலை) எண். 299 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

Verified E-Gazette

கோருகின்ற ஏதேனும் தகவல்கள், கோரப்பட்ட ஏழு நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும். உரிய அரசால்* நியமிக்கப்பட்ட அலுவலர், சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பால் கோரப்பட்ட தகவலை அளிக்கும் பொறுப்புடையவராவார்.

(4) அனைத்து தொடர்புடைய நில பதிவுருக்கள் மற்றும் தரவுகளை முழுமையாக பகுப்பாய்வு செய்தல், களப்பணி ஆய்வு சரிபார்ப்பு, ஒத்த திட்டப்பணிகளுடன் ஆய்வு மற்றும் ஒப்பிடுதல் ஆகியவற்றின் அடிப்படையில் விரிவான மதிப்பீடு ஒன்று, சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பால் நடத்தப்படும்.

இம் மதிப்பீடு, பின்வருவனவற்றை தீர்மானிக்கும். அவையாவன:

(அ) கையகப்படுத்தப்பட வேண்டிய நிலங்கள் உட்பட, முன்மொழியப்பட்ட திட்டப்பணியின் தாக்கப் பகுதி மற்றும் திட்டப்பணியின் சமூக அல்லது யாதொரு தாக்கத்தினால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள்.

(ஆ) திட்டப்பணிக்காக கையகப்படுத்தப்பட வேண்டிய நிலத்தின் அளவு மற்றும் அமைவிடம்.

(இ) கையகப்படுத்துவதற்கு கருதப்பட்ட நிலம், குறைந்த அளவு தேவையை நிறைவு செய்கிறதா

(ஈ) திட்டப்பணிக்காக கிடைக்ககூடிய மாற்று இடங்கள் மற்றும் அவற்றின் சாத்தியத்தன்மை.

(உ) அட்டவணையிடப்பட்ட பகுதியில் கையகப்படுத்தப் படுவதற்காக கருதப்பட்ட நிலமானது, தவிர்க்க இயலாத கடைசிகட்ட அமைவிடமா (Demonstrable last resort).

(ஊ) ஏற்கனவே வாங்கப்பட்ட, உடைமை உரிமை மாற்றப்பட்ட, குத்தகைக்கு விடப்பட்ட அல்லது கையகப்படுத்தப்பட்ட நிலம், ஏதேனும் இருப்பின், திட்டப்பணிக்கு தேவைப்படும் ஒவ்வொரு மனையின் பயன்பாடு.

(எ) ஏதேனும் பொது, பயன்படுத்தப்படாத நிலத்தை திட்டப்பணிக்காக பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு. அத்தகைய நிலம் ஏதேனும் இருக்கிறதா,

(ஏ) நிலத்தின் தன்மை, தற்போதைய பயன்பாடு, மற்றும் நிலத்தின் வகைப்பாடு, அந்நிலம் விவசாய நிலமாகயிருப்பின், நீர்ப்பாசன அளவு மற்றும் பயிரிடும் முறை

(ஐ) கருதப்பட்ட நிலம் கையகப்படுத்தலில், உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் சிறப்பு விதித்துறைகள்** பின்பற்றப்பட்டுள்ளதா,

(ஒ) வைத்திருக்கும் நிலத்தின் அளவு, உரிமையாளர் நடைமுறை, நிலப்பகிர்வு, குடியிருப்பு வீடுகள், பொது–தனியார் உட்கட்டமைப்பு மற்றும் சொத்துகளின் எண்ணிக்கை.

(ஓ) கடந்த மூன்றாண்டுகளில் நிலத்தின் விலை, அண்மைக்கால உரிமையாளர் மாற்றங்கள், நிலம் மாற்றல் மற்றும் பயன்பாடு

(5) நில மதிப்பீடு, நில பதிவுருக்கள் மற்றும் களப்பணி ஆய்வின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களையும் கணக்கிட்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் இடம் மாறிய குடும்பங்களின் துல்லியமான மதிப்பீட்டு எண்ணிக்கைக்கு சமூகத் தாக்க மதிப்பீட்டு அறிக்கை வகைசெய்யும்.

(6) பாதிக்கப்பட்ட பகுதியின் சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு விவரக்குறிப்பு, கிடைக்கக் கூடிய தரவு மற்றும் புள்ளிவிவரங்கள், கள ஆய்வுகள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களை கொண்டு சமூகத்தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பு தயார் செய்ய வேண்டும்.

(i) திட்டப்பகுதியில் மக்கள் தொகையின் விவரம்

a) வயது, பாலினம், வகுப்பு, மதம்

b) கல்வியறிவு, உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலை

(ii) வறுமை நிலைகள்

(iii) பாதிப்பிற்குள்ளாகும் குழுக்கள்

(a) பெண்கள்

(b) குழந்தைகள்

(c) முதியோர்

(d) பெண்கள் தலைமையிலான குடும்பங்கள்

(e) மாற்றுத்திறனாளிகள்

(iv) குடும்பத்தில் உறவு முறைமைகள் மற்றும் பெண்களின் பங்கு

(v) சமூக மற்றும் பண்பாட்டு அமைப்பு

* அரசாணை (நிலை) எண். 301 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

** அரசாணை (நிலை) எண். 299 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

Verified RedEstate™

(vi) நிருவாக அமைப்பு

(vii) அரசியல் அமைப்பு

(viii) குடிமைச்சமூக அமைப்பு மற்றும் சமூக இயக்கங்கள்

(ix) நிலப்பயன்பாடு மற்றும் வாழ்வாதாரம்

(x) உள்ளூர் பொருளாதார நடைமுறைகள்

(xi) உள்ளூர் வாழ்வாதாரங்களில் பங்கு வகிக்கும் காரணிகள்

(xii) வாழ்க்கைச்சூழலின் தரம்

(7) மேற்குறிப்பிடப்பட்ட செய்முறைகளில் சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் பாதிக்கப்பட்ட பொறுப்பாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில், கருதப்பட்ட திட்டப்பணி மற்றும் நிலம் கையகப்படுத்துதலுடன் தொடர்புடைய சாதகமான மற்றும் பாதகமான சமூகத் தாக்கங்களின் தன்மை, அளவு மற்றும் வீரியத்தை சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பு கீழே குறிப்பிட்டுள்ளவாறு கண்டறிந்து, மதிப்பீடு செய்யும்.

(i) நிலம், வாழ்வாதாரம் மற்றும் வருவாயின் மீதான தாக்கம்

(ii) திட்ட வள ஆதாரங்கள் மீதான தாக்கம்

(iii) தனியார் சொத்துக்கள், பொதுச்சேவைகள் மற்றும் பயன்பாடுகளின் மீதான தாக்கம்

(iv) உடல்நலத் தாக்கம்

(v) கலாச்சார மற்றும் சமூக இணக்கம் மீதான தாக்கம்

(vi) திட்ட சுழற்சியில் பல்வேறு நிலைகளில் தாக்கம்

(a) முன் கட்டுமான நிலை

(b) கட்டுமான நிலை

(c) செயல்பாட்டு நிலை

(d) செயல்படாத நிலை

(e) நேரடி மற்றும் மறைமுக தாக்கங்கள்

(f) வேறுபட்ட தாக்கங்கள்

(g) ஒட்டுமொத்த தாக்கங்கள்

(8) சமூகத் தாக்க மதிப்பீட்டு அறிக்கையானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை கொண்டிருக்கும்.

a) செயல்பாட்டுச் சுருக்கம்

b) விரிவான திட்டக்குறிப்பு விவரம் மற்றும் இத்திட்டம் பொது நோக்கத்திற்கானதா ?

c) சமூக தாக்க மதிப்பீட்டிற்கான குழு அமைத்தல், அணுகுமுறை, நடைமுறை மற்றும் அட்டவணை

d) நில மதிப்பீடு–நிலங்களின் பரப்பளவு, (பொது மற்றும் தனியார்), வீடுகள், நிலத்தீர்வைகள் மற்றும் கருதப்பட்ட நிலம் கையகப்படுத்தப்படுவதினால் பாதிக்கப்படும் ஏனைய பொதுச்சொத்துக்கள்;

e) கையகப்படுத்தப்படுவதற்கான நிலத்தின் அளவு, திட்டத்திற்குத் தேவையான குறைந்தளவானதாக இருக்கிறதா ?

f) மாற்று இடத்தில் நிலம் கையகப்படுத்தப்படுவதற்கு கருதிப்பார்க்கப்பட்டு சாத்தியமற்றதாக உள்ளதா ?

g) இடமாற்றம் செய்யப்பட்டுவதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சொத்துக்கள் மதிப்பீடு மற்றும் கணக்கெடுப்பு (தேவையான இடங்களில்)

h) சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டு விவரம் (பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் மறுகுடியேற்ற இடம்)

i) பிரிவு 4 இன் உட்பிரிவு (5)இல் விவரிக்கப்பட்டவாறாக பொது மற்றும் சமுதாய சொத்துக்கள் மற்றும் கட்டமைப்பு மீதான சமூகத்தாக்கங்கள்

j) செலவினங்கள் மற்றும் பயன்பாட்டின் பகுப்பாய்வு மற்றும் கையகப்படுத்துதலுக்கான பரிந்துரை

k) குறிப்புரைகள் மற்றும் படிவங்கள்

Verified RedEstate ™

(9) சமூகத்தாக்க மதிப்பீட்டு ஆய்வில் கண்டறியப்பட்ட சமூகத் தாக்கங்களுக்கு தீர்வு காண்பதற்கு, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைத்து சமூகத் தாக்க மேலாண்மை திட்டத்தையும் தயார் செய்கையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:–

(i) தணிப்புக்கான அணுகுமுறை

(ii) பிரிவு (4)இன் (5)ஆம் உட்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, திட்டத்தின் தாக்கத்தைத் தவிர்க்கவும், தணிக்கவும் மற்றும் ஈடுசெய்வதற்குமான தூண்டுதல் நடவடிக்கைகள்

(iii) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மறுவாழ்வு மற்றும் மறுகுடியேற்றத் திட்டங்களின் நடவடிக்கைகள்

(iv) தாக்கத்தினைத் தவிர்க்கவும், தணிக்கவும் மற்றும் ஈடுசெய்யவும் திட்ட செயற்குறிப்பில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கோருகின்ற அமைப்பு தெரிவித்துள்ள நடவடிக்கைகள்

(v) சமூகத்தாக்க மதிப்பீட்டு செய்முறை மற்றும் பொது விசாரணைகளின் முடிவுகளுக்கேற்ப மேற்கொள்ளப்படும் என கோருகின்ற அமைப்பு தெரிவித்துள்ள கூடுதல் நடவடிக்கைகள்

(vi) ஒவ்வொரு தணிப்பு நடவடிக்கை; கால அளவு மற்றும் ஒவ்வொரு நடவடிக்கைக்கான செலவுத்தொகைக்கு பொறுப்பு வகிக்கின்ற முக்கிய நபர்கள் மற்றும் நிறுவன ரீதியிலான கட்டமைப்பு விவரங்கள்

(10) தணிப்பு நடவடிக்கைகள் உட்பட கருதப்பட்ட திட்டப்பணி மற்றும் நிலம் கையகப்படுத்துதலின் பயன்கள் மற்றும் சமூகத்தாக்கங்கள் மற்றும் சமூகம்சார்ந்த செலவுத்தொகைகளின் இருப்பு மற்றும் பகிர்மானம் குறித்த இறுதி மதிப்பீட்டிற்கு வகைசெய்கின்ற முறையில் சமுகத்தாக்க மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்படும். கருத்தப்பட்ட திட்டப்பணிகளின் பயன்களானது, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஏற்படவிருக்கின்ற சமூகம்சார்ந்த செலவுகள் மற்றும் பாதகமான சமுகத் தாக்கங்களை காட்டிலும் விஞ்சியிருக்குமா அல்லது கருதப்பட்ட தணிப்பு நடவடிக்கைகளுக்குப் பின்னரும்கூட, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பொருளாதார ரீதியில் இடர்பாட்டினை சந்திக்குமா அல்லது சமூகரீதியாக நலிவடையுமா என்பதற்கான மதிப்பீடு ஒன்றுக்கும் வகைசெய்யும்.

11. மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தினை நடத்தும் செயல்முறை :

(1) சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வு வரைவு அறிக்கையை, சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பால் தயார்செய்யப்படும்போது, உரிய அரசு* அமைப்பு மாவட்ட நிருவாகத்தின் வாயிலாக பாதிக்கப்பட்ட பகுதிகளில், மக்கள் கருத்துக் கேட்புக்கூட்டம் நடைபெறுகிற நேரம், நாள் மற்றும் இடத்தினை தெரிவிக்கிறவகையில் பதினைந்து நாட்கள் கால அளவிற்கு குறையாமல் அறிவிப்பு அளிப்பதன்பேரில் மக்கள் கருத்துக் கேட்புக்கூட்டம் நடத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். கருத்துக்கேட்பு கூட்டத்தில், சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வு வரைவு அறிக்கையின் கூறப்பட்டுள்ள முக்கிய முடிவுகள் முன்வைக்கப்பட்டு, மக்களின் கருத்துகள் கோரப்படும். அத்தகைய கருத்துகள், கருத்துக் கேட்பு கூட்டத்தில் மக்களிடமிருந்து பெறப்பட்டக் கருத்துக்கள் மற்றும் ஏனைய கூடுதல் தகவல்கள் ஆகியவற்றை சமூகத் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் சேர்க்கப்படும்.

(2) அனைத்து மக்கள் கருத்துக்கேட்பு கூட்டங்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பு, அந்த ஆவணங்களை, சமூகத் தாக்க மதிப்பீட்டு இறுதி அறிக்கையுடன் உரிய அரசிடம்* ஒப்படைக்கும்.

(3) கருத்துக்கேட்பு கூட்டத்தில், பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் மற்றும் ஆலோசனைகளும் சமூகத் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் பதிவு செய்யப்பட்டு , உரியவாறு பரிசீலிக்கப்படவேண்டும்.

(4) இது தொடர்பாக கோருகின்ற அமைப்பால் ஏற்பளிக்கப்பெற்ற பிரதிநிதிகள், கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்துகொண்டு, பாதிக்கப்பட்ட மக்களால் எழுப்பப்பட்ட கேள்விகள் மற்றும் சந்தேகங்களைப் போக்க வேண்டும்.

(5) கருத்துக்கேட்பு கூட்டங்கள், உள்ளூர் மொழியில் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.

(6) வரைவு சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வு அறிக்கை மற்றும் வரைவு சமூகத் தாக்க மேலாண்மை திட்டம் சமூகத் தாக்க மதிப்பீட்டு முகவரமைப்பால் உள்ளூர் மொழியிலேயே தயாரிக்கப்பட்டு, கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறும் நாளுக்கு முன்னரே, நேர்விற்கேற்ப கிராம அளவில் அல்லது வார்டு அளவில் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறுமாறுச் செய்ய வேண்டும். மேற்சொன்ன அறிக்கையின் நகல்கள், தொடர்புடைய வருவாய் மாவட்டத்தின் ஆட்சியர், வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு எட்டு நாட்களுக்கு முன்னரே வைக்கப்பட்டிருக்க வேண்டும். கோருகின்ற அமைப்பிற்கு, அந்த அறிக்கையின் நகல் ஒன்றும் அளிக்கப்பட வேண்டும்.

(7) பொது அமைதி, சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்கெடும்வகையில் தவறான நடத்தை அல்லது விஷமிகளால் கருத்துக்கேட்பு கூட்டங்கள் பாதிப்படையும்போது, கருத்துக்கேட்புக் கூட்டங்கள் மீண்டும் நடத்தப்பட மாட்டாது. அத்தகைய சூழலில், அக்கருத்துக் கேட்புக்கூட்டம் நடத்தி முடிக்கப்பட்டதாக கருதப்படும்.

---

* அரசாணை (நிலை) எண். 299 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாயம் IV

முன் அனுமதி

12. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் முன் அனுமதியை பெறுவதற்கான நடைமுறை:– பொது நோக்கத்திற்காக தனியரின் நிறுவனங்களுக்கு நிலம் கையகம் செய்யும் நேர்வுகளுக்கு இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் (2) உட்பிரிவின், (b) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் முன் அனுமதியை பெறுவதற்கான நடைமுறை. பின்வருமாறு:

(a) நேர்விற்கேற்ப, கிராம அளவில் அல்லது வார்டு அளவில் உரிய அரசு, இச்செயல் நோக்கத்திற்காக நியமனம் செய்த அதிகார மன்றத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கூட்டம் நடத்தப்படும்.

(b) நியமிக்கப்பட்ட அதிகாரமன்றத்தால், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிடைக்கும்படிச் செய்யப்படும்.

(c) நியமிக்கப்பட்ட அதிகாரமன்றம், மூன்று வாரங்களுக்கு முன்னதாகவே கூட்டம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் பற்றிய அறிவிப்பினை அளிக்க வேண்டும்.

(d) மறுவாழ்வு, மறுகுடியமர்வு மற்றும் இழப்பீடு குறித்து ஆலோசிப்பதற்கும் முடிவுகள் எடுப்பதற்கும் கோருகின்ற அமைப்பின், தகுதிவாய்ந்த பிரதி நிதிகள் அனைத்து கூட்டங்களிலும் கலந்துகொண்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எழுப்பும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும். ஒப்புக்கொள்ளப்பட்டவாறாக மறுவாழ்வு, மறுகுடியமர்த்துதல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் குறித்த வரையறை நிபந்தனைகள் நிலம் கையகப்படுத்தக்கோரும் அமைப்பின் பிரதிநிதிகளால், பாதிக்கப்பட்ட மக்களால் எழுப்பப்படும் ஐயப்பாடுகள் அவர்களின் உள்ளூர் மொழியில் விளக்கப்பட வேண்டும் மற்றும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளில், கோருகின்ற அமைப்பின் பிரதிநிதிகள், மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் கையொப்பத்தையும் பெறவேண்டும்.

(e) கூட்டத்தின் முடிவில், இந்த விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம்–II இல், சம்பந்தப்பட்ட நிலத்தினை கையகப்படுத்துவதற்கான ஒப்புதல் அளிக்கிறாரா அல்லது மறுப்பு தெரிவிக்கிறாரா என்பதற்கான உறுதிமொழி பத்திரத்தை பாதிக்கப்படும் குடும்பத்தினர் அளிக்குமாறும் மற்றும் அதில் கையொப்பமிடுபவரின் ஒரு புகைப்படத்தை ஒட்டவும் கேட்டுக் கொள்ளவேண்டும்.

(f) படிவம்–IIஇல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கான ஒப்பந்தம் வகையில், நிலம் கையகப்படுத்தக்கோரும் அமைப்பின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியும் கையொப்பமிட்டு, கோருகின்ற அமைப்பின் முத்திரையிட வேண்டும்.

(g) நேர்விற்கேற்ப சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்தின் கிராம அளவிலான அல்லது வார்டு அளவிலான யாதொரு நபர் அல்லது யாதொரு அரசு ஊழியர் படிவம் II இல் கையொப்பமிட்டிருக்கிற நபரை அங்கீகரிக்கின்ற வகையில் படிவம் II இல் ஒரு சாட்சியாக கையொப்பமிடலாம்.

(h) அவ்வாறு படிவம் IIஇல் பெறப்பட்ட ஒப்புகையின் ஒரு நகல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் கையகப்படுத்தக்கோரும் அமைப்புக்கும் வழங்கப்பட வேண்டும்.

(i) ஒரே நிலப்பகுதியுடன் சம்பந்தப்பட்ட அனைத்துக் குடும்பத்தினரும் ஒரே படிவத்தில் அவர்களுடைய ஒப்புதலை வழங்கலாம்.

(j) வெவ்வேறு நிலங்களைப் பொறுத்தமட்டில் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தினரால் வழங்கப்படும் ஒப்புதலுக்கு வெவ்வேறு படிவங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்

(k) மேற்சொன்ன முறையில் வழங்கிய ஒப்புதலை பாதிக்கப்பட்ட குடும்பம் திரும்பப் பெற இயலாது.

(l) ஒப்புதல் நடைமுறையை தொடங்குவதற்கு முன்னர் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் உள்ளூர் மொழியில், ஒப்புதலுடன் தொடர்புடைய விதிமுறைகள் மொழிபெயர்க்கப்பட்டு, கூட்டம் நடைபெறுகையில், அதன் ஒரு நகல் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் வழங்கப்பட வேண்டும். படிப்பறிவில்லாத பாதிக்கப்பட்ட குடும்பத்தினராய் இருக்கும் நேர்வில் அவை படித்துக் காண்பிக்கப்பட வேண்டும்.

(m) கூட்டத்தில் கலந்துக்கொள்ள இயலாத, பாதிக்கப்பட்ட குடும்பத்தினர், அத்தகைய கூட்டம் நடைப்பெற்ற நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், நியமன அதிகாரியிடம், தங்களுடைய கையொப்பமிடப்பட்ட உறுதிமொழியை படிவம் IIஇல் வழங்குவதற்கு ஏதுவான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கையொப்பமிடப்பட்ட ஒப்புதல் படிவங்கள் பெறப்பட்டவுடன், நியமன அதிகாரியால் மேலொப்பமிடப்பட்டு, வரையறை நிபந்தனைகளுடன் கூடிய நகல் உறுதிமொழியளித்த ஒவ்வொருவருக்கும் வழங்கவேண்டும்.

(n) மேற்சொன்ன சட்டத்தின் 3ஆவது பிரிவின் (zd) ஆவது கூற்றில் வரையறுக்கப்பட்டவாறுள்ள ஏதேனும் பட்டியலிடப்பட்ட பகுதியில் அமைந்துள்ள நிலத்தினை பொறுத்தவரையில், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரைப் பொறுத்த வரையிலான ஒப்புதல் நடைமுறையை தொடங்குவதற்கு முன்னர் இந்த விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் IIIஇல் கிராம சபையின் ஒப்புதல் பெறவேண்டும்.

(o) மேற்சொன்ன சட்டத்தின் 11ஆம் பிரிவின் (1)ம் உட்பிரிவின் கீழ் முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் மேற்கண்ட நடைமுறை முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

விளக்கம்: இந்த விதியின் நோக்கத்திற்காக "பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்" என்பது மேற்சொன்ன சட்டத்தின் 3 ஆம் பிரிவைச்சேர்ந்த (c) பகுதியின் (i) மற்றும் (v) ஆம் உட்பகுதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு பாதிக்கப்பட்ட குடும்பங்கள் என பொருள்படும்.

அத்தியாயம் V

நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்துதல் திட்டத்திற்கான முதல்நிலை அறிவிக்கை

13. முதல்நிலை அறிவிக்கையை வெளியிடுதல்:– (1) 11ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முதல்நிலை அறிவிக்கை படிவம் IVஇல் வெளியிடப்படவேண்டும்

(2) 11ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முதல்நிலை அறிவிக்கையின் ஒரு நகல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கவனத்தை ஈர்க்கக் கூடிய இடங்களில் ஒட்டப்படவேண்டும் மற்றும் பெரியளவில் விளம்பரப்படுத்துவதற்கு பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் முறையில் ஒலிப்பெருக்கிகள் பொருந்தப்பட்ட வாகனம் மூலம் அறிவிக்க வேண்டும்.

(3) மேற்சொன்ன சட்டத்தின் 11ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்னர், மாவட்ட ஆட்சியர் முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் அளவிற்குள், கீழ்க்கண்டவாறு நில ஆவணங்களை நாளது வரையாக்கும் செயற்பாடுகளை செய்து முடிக்கவேண்டும்.

(a) இறந்துபோன நபர்களின் பெயர்களை நீக்குதல்.

(b) இறந்துபோன நபர்களின் சட்டரீதியான வாரிசுகளின் பெயர்களை பதிவுசெய்தல்.

(c) விற்பனை, கொடை, பங்கீடு போன்ற நிலத்தின் மீதான பதிவு செய்யப்பட்ட பரிமாற்றங்களுக்கு அவசியமான பதிவுகளைச் செய்தல்.

(d) நிலத்தின் அனைத்து அடமானப் பதிவுகளையும் பதிவு செய்தல்

(e) முழு கடன்களையும் செலுத்திய வகையில் அடமானதாரால் வழங்கப்படும் கடிதத்தை பொறுத்த நேர்வில் அடமானம் பற்றிய பதிவுகளை நீக்குதல்.

(f) நடைமுறையிலுள்ள அனைத்து வனச்சட்டங்கள் குறித்த தேவையான பதிவுகளைச் செய்தல்.

(g) அரசு நிலங்களைப் பொறுத்த நேர்வில் தேவைப்படும் பதிவுகளைப் பதிவு செய்தல்

(h) ஏற்கனவே செய்யப்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் கையகப்படுத்தலுடன் தொடர்புடைய நில அளவை எண்களின் உட்பிரிவுகள் பதிவுகளை பதிவு செய்தல்.

(i) சொத்துக்கள் மற்றும் நிலத்தின் அமைப்புகளான மரங்கள், கிணறுகள், வீடுகள், கட்டிடங்கள் போன்ற நிலத்தின் அமைப்புகளைப் பொறுத்து தேவைப்படும் பதிவுகளை பதிவு செய்தல்.

(j) நிலத்தின் வேளாண் அல்லாத ஏனைய பயன்பாடுகள் குறித்த தேவையான பதிவுகளை மேற்கொள்ளுதல்;

(k) நிலத்தின் பங்கு குத்தகைதாரர் அல்லது குத்தகைதாரர் குறித்த தேவையான பதிவுகளை மேற்கொள்ளுதல்;

(l) வளர்ந்த பயிர்கள் அல்லது விதைக்கப்பட்ட பயிர்கள் மற்றும் அத்தகைய பயிர்கள் பயிரிடப்பட்ட பகுதி குறித்த தேவையான பதிவுகளை மேற்கொள்ளுதல்;

(m) நிலம் கையகப்படுத்தப்படுதல், இழப்பீடு வழங்குதல், மறுவாழ்வு அளித்தல் மற்றும் மறுகுடியமர்த்தம் குறித்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல் ஆகியவை குறித்து நாளது வரையிலான விவரங்களைத் தரவேற்றுதல் அல்லது ஏனைய இதர பதிவுகளை மேற்கொள்ளுதல்.

(4) மேற்சொன்ன நடவடிக்கைகளை நிறைவு செய்யும் பொருட்டு, மாவட்ட ஆட்சியாளர், தேவையான ஆவணங்களை ஒரு மாதக்கால அளவிற்குள் அளிக்குமாறு பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு அறிக்கை அனுப்பலாம்.

14. மறுப்புரைகள் குறித்து விசாரித்தல்.– (1) மாவட்ட ஆட்சியர், மறுப்புரைகள் ஏதேனுமிருப்பின் அவற்றை, படிவம் V-இல் வழங்குமாறு அறிக்கை ஒன்றை வெளியிடவும், அனைத்து மறுப்புரைகளையும் விசாரித்து, பின்னர், 15ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு அவற்றின் மீது விசாரணை மேற்கொண்டு, அம்மறுப்புரைகளின் மீதான அவரது பரிந்துரைகளுடன்அது குறித்த அறிக்கை ஒன்றை, அவை குறித்து முடிவு எடுப்பதற்காக உரிய அரசிற்கு அனுப்பவேண்டும்.

(2) மாவட்ட ஆட்சியாளரின் அறிக்கை பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:–

(a) உத்தேசிக்கப்பட்டுள்ள நிலக்கையகப்படுத்தல், பொதுநன்மைக்காகப் பயன்படுகிறதா என்பது குறித்து மதிப்பிடுதல்;

(b) கையகப்படுத்துவதாக உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் பரப்பு, திட்டத்திற்குத் தேவையான குறைந்தபட்ச முழு அளவைக் கொண்டிருக்கிறதா என்பது குறித்து;

(c) நிலம் கையகப்படுத்த மாற்று இடம் கருதப்பட்டு, அவ்விடம் சாத்தியமற்றது எனக் கண்டறியப்பட்டதா என்பது குறித்து;

(d) அப்பகுதியில், ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட யாதொரு நிலமும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறதா என்பது குறித்து;

(e) மறுப்புரைகள் குறித்த பரிந்துரைகள்;

(f) நடவடிக்கைகளின் மீதான பதிவுறு;

(g) சமூகதாக்க பயன்பாட்டு மதிப்பீடு ஆய்வு விலக்களிக்கப்பட்டுள்ள நேர்வுகளில் நிலம் கையகப்படுத்தப்படுவதற்கான தோராய மதிப்பு.

Verified @ RedEstate

அத்தியாயம் VI

மறுவாழ்வு அளித்தல் மற்றும் மறுகுடியமர்த்தம் செய்தல் திட்டம்

15. **நிருவாகியால் மேற்கொள்ளப்படும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்திற்கான ஏற்பாடுகள்.–** இத்திட்டத்தைப் பொறுத்தமட்டில், மேற்சொன்ன சட்டத்தின்43(1) பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிருவாகி.–*

(1) இச்சட்டத்தின் 11ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் உரிய அரசால்** முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்னர், சமூகதாக்க மதிப்பீட்டு அறிக்கையையும் (அத்தகைய அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கும் நேர்வுகளில்) மற்றும் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஏனைய அரசு ஆவணங்கள் போன்ற இரண்டாம்நிலை ஆதாரங்களிலிருந்து கிடைக்கப்பெறும் தரவுகளையும் கருத்தில் கொண்டு, தொடக்க அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று திங்கள் காலஅளவிற்குள், ஆய்வு ஒன்றையும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குறித்த கணக்கெடுப்பு ஒன்றையும் மேற்கொள்ள வேண்டும். தேவைப்படும்போது, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்று சரிபார்த்தல் மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களில் கிடைக்கப்பெறும் உட்கட்டமைப்பு வசதிகளை மதிப்பீடு செய்ய வேண்டி களஆய்வு மேற்கொள்ளுதல் ஆகியவற்றின்வாயிலாக தரவுகளைச் சரிபார்க்கவேண்டும்.

(2) நிருவாகி, மேற்சொன்ன ஆய்வு மற்றும் கணக்கெடுப்பின்அடிப்படையில், இச்சட்டத்தின் 16ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் இரண்டாம் அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்களுடன், பின்வரும் விவரங்களையும் சேர்த்து, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டவரைவு ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

(a) இடமாற்றம் செய்யப்பட உள்ள குடும்பங்களின் பட்டியல்;

(b) பாதிக்கப்பட்ட பகுதியில் இருக்கும் உட்கட்டமைப்பு வசதிகளின் பட்டியல்;

(c) பாதிக்கப்பட்ட இடத்தில் இருக்கும் நிலப்பகுதிகளின் பட்டியல்;

(d) பாதிக்கப்பட்ட இடத்தில் உள்ள வணிக/வியாபார விவரங்களின் பட்டியல்;

(e) பட்டியலினத்தவர் அல்லது பட்டியல் பழங்குடியினர் மற்றும் அவற்றின் உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாற்றுதிறனாளி நபர்கள் போன்ற சாதகமற்ற பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பட்டியல்: மற்றும்

(f) கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தைத் தமது முதன்மை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களின் பட்டியல்.

(3) நிருவாகி, பின்வரும் முறைகளில், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டவரைவு குறித்து பரந்த அளவில் விளம்பரப்படுத்த வேண்டும், அவையாவன:–

(a) அரசிதழில்;

(b) உள்ளூரில் பயன்பாட்டிலுள்ள இரு நாளிதழ்களில்;

(c) நேர்விற்கேற்ப உள்ளாட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் மற்றும் கிராம நிருவாக அலுவலர்/வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் ,வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆணையர் அலுவலகங்களில் உள்ளூர் மொழிகளில் இருத்தல்.

(d) உரிய அரசு** வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்

(e) பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அதன் அலுவலகங்களில் பொது அறிவிப்பை ஒட்டிவைத்தல்.

4. சம்பந்தப்பட்ட நபர் மற்றும் அதிகாரமளிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கும் வகையில் வரைவுத் திட்டத்தை நிருவாகி உருவாக்கவேண்டும்.

(5) அவரால் நியமனம் செய்யப்பட்ட நிருவாகி அல்லது அலுவலர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுகுடியேற்றம் மற்றும் மறுவாழ்வு திட்டவரைவு குறித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பதற்காக அவர் உகந்ததாகக் கருதும் நாட்களில் நடத்த வேண்டும். அது அத்தகைய திட்டம் குறித்து அறிவிப்பு வெளியிட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்கு முன்னதாக இருக்கக்கூடாது. மேலும் கூட்டம் நடைபெறும் நாள், இடம் மற்றும் நேரம் குறித்து பெரிய அளவில் விளம்பரப்படுத்த வேண்டும். 11ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள முறைதான் இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பிற்குப் பொருந்தும். பொதுமக்கள் கருத்து கேட்கும் போது பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் குறித்த ஆவணங்களை நிருவாகி பராமரிக்க வேண்டும்.

(6) பொதுமக்கள் கருத்துக் கேட்பு முடிவடைந்த பின்னர் பதினான்கு நாட்களுக்குள்ளாக மறுகுடியேற்றம் மற்றும் மறுவாழ்வு திட்டம் கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் குறித்த அறிக்கையுடன் சேர்த்து நிருவாகி மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கவேண்டும்.

16. **19(2)ஆம் பிரிவின் கீழ் விளம்புகை வெளியிடுதல்:–** சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் கீழ் , கையகப்படுத்தும் அந்நிலத்தின் மதிப்பில் ஐம்பது விழுக்காடு தொகையை கோருகின்ற அமைப்பு செலுத்திய பின்னர்தான், 19 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் படிவம் VIஇல் மாவட்ட ஆட்சியர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தேவைப்படும் யாதொரு நிலமும் உள்ளது என அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

---

* அரசாணை (நிலை) எண். 302 வ(மு)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

** அரசாணை (நிலை) எண். 299 வ(மு)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

17. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினக் குடும்பங்களுக்கான மேம்பாட்டுத் திட்டம் :

கோருகின்ற அமைப்பு நிலம் கையகப்படுத்துதிலினால் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின குடும்பங்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளது எனில் பிரிவு 41ன்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுடன் மேம்பாட்டுத் திட்டம் தயார் செய்யப்பட வேண்டும்.

(a) நில உரிமைகள் தீர்வு காணப்படாத, இடம் பெயர்ந்த பட்டியல் இனத்தவர்/பழங்குடியின நபர்களின் பட்டியல்

(b) மேற்சொன்ன பட்டியல் இனத்தவர் / பழங்குடியினரின் உரிமை ஒப்பாவணத்தை திருப்பி வழங்கும் திட்டம்

(c) இச்சட்டத்தின் 41(5)ஆம் பிரிவின் கீழ், பழங்குடியின சமுதாயத்தின் மற்றும் பட்டியல் இனத்தவரின் தேவைகளை எதிர்கொள்வதற்குப் போதுமான வனமல்லாத நிலங்களின் எரிபொருள், தீவனம் மற்றும் வெட்டுமரம் அல்லாத வன ஆதாரங்களுக்கு மாற்றாக உள்ள மாற்றுப் பொருட்களை ஐந்து ஆண்டுகள் கால அளவிற்குள் மேம்படுத்துவதற்கான திட்டம்.

(d) உரிய அரசால், சமூக மற்றும் சமுதாயக் கூட்டங்களுக்கு இலவசமாக, அதே அளவிலான நிலத்தை வழங்க முடிவு செய்தல்.

(e) நிலமற்ற தொழிலாளிகளுக்கு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் அல்லது/ ஏனைய யாதொரு அரசு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் பணி வழங்கப்பட வேண்டும்.

(f) பாதிக்கப்பட்ட குடும்பத்தினைச் சார்ந்த இளைஞருக்கு திறன்மேம்பாடு வாயிலாக பல்வேறு பயிற்சி திட்டங்கள்

(g) பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வனமல்லாத நிலத்திலிருந்து எரிபொருள், தீவனம் மற்றும் மரமல்லாத விளைபொருட்கள் போன்ற மாற்று ஆதார வளங்கள்.

(h) பொருந்தக் கூடிய வகையில், நீர்த்தேக்கப் பகுதி அல்லது நீர்மின் திட்டங்களில் மீன்பிடிப்பதற்கான உரிமைகள்

(i) பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த பாதிக்கப்பட்ட குடும்பங்கள், மாவட்டத்திற்கு வெளியேயுள்ள பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருப்பின், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான பயன்களாக, ஒருமுறை வழங்கப்படும் உரிமைத் தொகையான ரூபாய் ஐம்பதாயிரத்துடன், கூடுதலாக இருபத்தைந்து விழுக்காடு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

(j) 2006ஆம் ஆண்டைய பழங்குடியினர் மற்றும் தொல்குடியினர் (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் சமூக உரிமைகள் தீர்வு செய்யப்பட்டு, அவை பணமதிப்பில் கணக்கிடப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டதால் இடம் பெயர்ந்த, தொடர்புடைய தனிநபருக்கு அத்தகைய சமூக உரிமைகளில் அவரின் பங்கில் வீதாச்சார அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும்

18. நிலம் கையகப்படுத்துதலுக்கான தீர்ப்பாணை :–

(1) நிலம் கையகப்படுத்துதலுக்கான தீர்ப்பாணை குறித்து பிரிவு 23 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு படிவம் VII மற்றும் VIII இல் அளிக்க வேண்டும்.

(2) நிலத்திற்கான சரியீட்டு தொகை இரண்டு கோடிக்கு மிகாமலும் மற்றும் நிலத்திற்கான சரியீட்டு தொகையுடன் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பயன்களும் சேர்த்து ஐந்து கோடிக்கு மிகாமலும் இருக்குமாயின் தீர்ப்பாணைக்கு மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் வழங்குவார்.

(3) நிலத்திற்கான சரியீட்டுத் தொகை இரண்டு கோடிக்கு அதிகமாக எட்டு கோடிக்கு மிகாமலும் மற்றும் நிலத்திற்கான சரியீட்டு தொகையுடன் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பயன்களும் சேர்த்து ஐந்து கோடிக்கு அதிகமாக இருபது கோடிக்கு மிகாமல் இருக்குமாயின் நில நிருவாக ஆணையரிடமிருந்து முன்அனுமதி பெற்ற பின்னர் மாவட்ட ஆட்சியர் தீர்வாணை வெளியிட வேண்டும்.

(4) நிலத்திற்கான சரியீட்டுத் தொகை எட்டு கோடிக்கு அதிகமாகவும் நிலத்திற்கான சரியீட்டுத் தொகையுடன் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தம் பயன்களும் சேர்த்து இருபது கோடிக்கு அதிகமாக இருக்குமாயின் மாநில அரசிடமிருந்து முன்இசைவு பெற்ற பின்னர் மாவட்ட ஆட்சியர் தீர்ப்பாணை வெளியிட வேண்டும்.

19. மறுகுடியமர்த்தத்திற்காக ஒரே ஒருமுறை உதவித்தொகையைப் பெறுவதற்கான தகுதி:– கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மட்டுமே இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் தொடர் எண் 10இன் கீழ் மறுகுடியமர்த்தத்திற்கான உதவித்தொகை ஒருமுறை பெறுவதற்கான தகுதி பெற்றவர்களாவர்.

20. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான மீன்பிடிக்கும் உரிமை:–

இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் தொடர் எண் 9க்கு நேராக உள்ள வரிசை (3)இல் மீன்பிடிக்கும் உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீன்வளத்துறையானது அரசின் நீர்ப்பாசனத்துறை, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை துறை மற்றும் சம்பந்தப்பட்ட பிறதுறைகளுடன் ஆலோசித்த பின்னர் அனுமதி அளிக்கவேண்டும்.

21. அதிகப்படியாக செலுத்தப்பட்ட தொகையை திரும்ப வசூலித்தல் :

(1) இச்சட்டத்தின் 33ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தீர்ப்பாணைக்கு திருத்தம் செய்யப்பட்ட பின்னர் தீர்வுத் தொகை யாதொரு நபருக்கும் மிகையாக வழங்கப்பட்டு இருப்பது உறுதி செய்யப்படுமாயின், மிகையாக வழங்கப்பட்ட தொகையை யாதொரு நபர் தாமாகமுன்வந்து செலுத்துவதற்கு அல்லது திரும்பச் செலுத்த மறுத்தால் மாவட்ட ஆட்சியரால், மிகையாக வழங்கப்பட்ட அத்தொகை நிலவருவாய் நிலுவையாக மீளப்பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எனினும், இத்தகைய மீளப்பெறும் நடவடிக்கையானது மிகையான தொகை எந்த நாளில் வழங்கப்பட்டதோ அந்த நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள்ளாக தொடங்கப்பட வேண்டும்.

22. தவறான கோரிக்கைகள் மூலமாக பெற்ற மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தம் பயன்களை மீளப் பெறுதல்:–

(1) யாதொரு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தம் பயன்கள் முறையற்ற கோரிக்கைகள் அல்லது தவறான வழிகளில் பெறப்பட்டு இருப்பின் அவற்றை 1890ஆம் ஆண்டு (மத்தியச் சட்டம் 1/1890) வருவாய் திரும்பப் வசூலித்தல் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் நிலவருவாய் நிலுவையாக மீளப்பெறப்பட வேண்டும்.

(2) அவ்வாறு மீளப் பெறப்பட்ட நிலம் அல்லது வீடுகள், நேர்விற்கேற்ப அதே திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும் அல்லது எனைய பொதுப்பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

(3) தவறான கோரிக்கைகள் அல்லது தவறான வழிகளில் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பயன்பாடுகள் பெறப்பட்டு இருப்பது தொடர்புடைய யாதொரு விவகாரங்களிலும் தீர்வு காண்பதற்கு, நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தல் ஆணையம்* உரிமையியல் நீதிமன்றத்திற்கான அதிகாரங்களைப் பெற்றிருக்கும்.

23. தனியார் நிறுவனங்கள் அல்லது குறிப்பிடப்பட்ட நபர் அல்லாத நபரால் கையகப்படுத்தும் நேர்வில் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தம் விதிமுறைகளை மேற்கொள்ளுதல்:–** இச்சட்டத்தின் கீழான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தல் தொடர்பான விதித்துறைகள், ஒப்பந்தத்தின் மூலமாக ஊரகப் பகுதிகளில் 2500 ஏக்கர்களுக்கு சமமான அல்லது அதற்கு அதிகமான நிலத்தை வாங்குதல், அல்லது நகர்ப்பகுதிகளில் 1250 ஏக்கர்களுக்கு சமமான அல்லது அதற்கு அதிகமான நிலத்தை வாங்குதல் ஆகிய இனங்களில் பொருந்தும்.

(a) இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் (3) உட்பிரிவின் பகுதி (a) இன் கீழ் தனியார் நிறுவனங்கள்; அல்லது

(b) இச்சட்டத்தின் 46ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட நபர் தவிர பிற நபரால்.

24. ஆண்டுத்தொகை அல்லது பணிக்கான தெரிவு: (1) நிலம் கையகப்படுத்தப்பட்டதால் வாழ்வாதாரங்களை இழந்த கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர்கள் மற்றும் கையகப்படுத்தப்பட்ட நிலத்தை வாழ்வாதாரத்திற்காக, முதன்மையாக சார்ந்திருக்கும் ஏனைய குடும்பங்கள் சட்டத்தின் இரண்டாவது விவர அட்டவணையின், தொடர் எண் 4 இன்கீழ் ஆண்டுத்தொகை அல்லது பணி மற்றும் ஒட்டுமொத்த நல்கைக்கு தகுதியுடையவர்களாவர். நிலம் கையகப்படுத்தப்பட்டதால் வாழ்வாதாரத்தை இழக்காத உரிமையாளர்கள் அல்லது அத்தகைய நிலங்களை முதன்மையாக சார்ந்திருக்காதவர்கள் அத்தகைய பயன்களை பெறுவதற்கு உரிமையுடைவர்கள் அல்லர்.

2) இச்சட்டத்தின் இரண்டாவது விவர அட்டவணையின் தொடர் எண்.4 இன்படி, யாதொரு பாதிக்கப்பட்ட குடும்பமும் பணிக்கு விருப்புரிமை தெரிவித்திருக்கும் நிலையில், கையகப்படுத்தப்பட்டதற்கான திட்டத்தின் வாயிலாக வேலைவாய்ப்புகள் உருவாக்கியும், அல்லது ஏனைய யாதொரு திட்டத்தின் வாயிலாகவும், தேவைப்படும் துறையில் பொருத்தமான பயிற்சி அல்லது திறன்மேம்பாட்டினை அளித்த பின்னர், உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளில், நிலம் எதற்காக கையகப்படுத்தப்பட்டதோ, அத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள தகுதியுடைய நபர் ஒருவருக்கு, குறைந்தளவு ஊதியங்களுக்குக் குறையாத வீதத்தில், கோருகின்ற அமைப்பானது வேலைவாய்ப்பிற்கான வழிவகையை செய்ய வேண்டும்.

3. இச்சட்டத்தின் இரண்டாவது விவர அட்டவணையின் தொடர் எண்.4இன் கீழ், இத்திட்டத்தின் வாயிலாக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்போது, வேலைவாய்ப்பிற்காக விருப்பம் தெரிவித்த பாதிக்கப்பட்ட குடும்பங்களிலிருந்து, தொடர்புடைய திட்டம் அல்லது ஏனையதொரு திட்டத்தில் வேலைவாய்ப்பிற்கு தகுதியானவராக பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சார்ந்த ஒரு நபரை அடையாளங் கண்டறிந்து, உரிய அரசு அல்லது நியமனம் செய்யப்பட்ட அதிகாரி இந்நோக்கத்திற்காக சான்றிதழ் ஒன்றினை வழங்கவேண்டும்.

4. பாதிக்கப்பட்ட குடும்பத்தின் உறுப்பினருக்கு பணி வழங்கும்போது, மேற்சொன்ன சான்றிதழின் அசல், சரி பார்ப்பதற்காக சான்றிதழ் வழங்கும் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். அந்த சான்றிதழ் வழங்கல் அதிகாரியிடமிருந்து, அச்சான்றிதழின் உண்மைத்தன்மை குறித்த கடிதம் பெறப்பட்ட பின்னரே அந்நபரின் வேலைவாய்ப்பு உறுதிசெய்யப்படும். சான்றிதழ் வழங்கும் அதிகாரி, அந்த சான்றிதழை சரிபார்த்து, அதில் உண்மைத்தன்மை உள்ளதெனக் கருதுவாராயின், அதனை சம்பந்தப்பட்ட வேலையளிப்பவருக்குத் தெரியப்படுத்தவேண்டும். மேலும், அந்த சான்றிதழில் 'வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது' என்று மேல்குறிப்பெழுதி இருத்தி வைத்துக்கொள்வார். சான்றிதழ் வழங்கும் அதிகாரி, இந்த நோக்கத்திற்காக, அவரால் பராமரிக்கப்படும் பதிவேட்டில் தேவையான பதிவுகளையும் செய்ய வேண்டும்

---

* அரசாணை (நிலை) எண். 305 வ(மு)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

** அரசாணை (நிலை) எண். 303 வ(மு)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

5. பாதிக்கப்பட்ட குடும்பங்கள், வேலைக்குப் பதிலாக ஒரே முறை வழங்கும் ரூபாய் ஐந்துஇலட்சம் அல்லது ஆண்டுத் தொகைக்கு விருப்பம் தெரிவித்திருப்பின் வேலைவாய்ப்பிற்காக பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினருக்கு வேலை பெறுவதற்கான அடையாளச் சான்றிதழ் வழங்கக்கூடாது.

6. அத்தகைய நபர்கள் தகுதியான பணிகளைப் பெறுவதற்கு வகை செய்யும் பொருட்டு, பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான துறையில் உரிய பயிற்சியும் திறன்மேம்பாடும் அளிப்பதற்கு கோருகின்ற அமைப்பானது ஏற்பாடு செய்யவேண்டும்.

7. சுய வேலைவாய்ப்பிற்காக, தொழில்முனைவோர் மேம்பாடு, தொழில்நுட்ப மற்றும் தொழில் முறையிலான திறன்களில், பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு, தேவையான பயிற்சி அளிக்க கோருகின்ற அமைப்பானது ஏற்பாடு செய்திட வேண்டும்.

அத்தியாயம் VII.

நிறைவேற்றுதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு குழு மற்றும் மாநில கண்காணிப்புக் குழு

25. மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தை நிறைவேற்றுதல்: நிருவாகி,* மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தை செயல்படுத்தி கண்காணிப்பார். மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்திற்கான சமூக தணிக்கைக்கு பிந்தைய செயல்பாட்டில் ஆணையாளருக்கு** உதவிபுரிவார்.

26. மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுகுழு: (1) இச்சட்டத்தின் 45ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு குழு ஏற்படுத்தப்பட்ட பின்னர், நிருவாகியால் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தின் வரைவு தயாரிக்கப்பட்டவுடன் அதன் முதல்கூட்டம் நடைபெற வேண்டும். இக்குழு வரைவுதிட்டத்தினை விவாதித்து, ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கவேண்டும்.

(2) மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டம் வெளியிடப்பட்டதற்குப் பின்னர், குழுவின் கூட்டம் மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்பட்டு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு நடைமுறைகள் முடிவடையும் வரையில், அதன் முன்னேற்றம் குறித்து விவாதிக்க வேண்டும்.

(3) செயல்பாட்டிற்குப் பிந்தைய சமூக தணிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, குழுவின் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டும்.

(4) குழு பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். தேவையேற்படின், மறுகுடியமர்வு நடைமுறைகளை கண்காணிப்பதற்கு மறுகுடியமர்வு பகுதிகளுக்குள் ஆய்வினை மேற்கொள்ளவேண்டும்.

(5) குழுவின் உறுப்பினர்கள், தொகுதி–A வகை அரசுப் பணியாளர்களுக்கு பொருந்தக் கூடிய வீதத்தில் பயணப்படி மற்றும் தினப்படியைப் பெறுவர்.

27. மாநிலக் கண்காணிப்புக் குழுவின் கூட்டங்கள்: (1) இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆணையாளரால்** இசைவளிக்கப்பட்ட மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டங்கள் செயல்படுத்துவதை, இச்சட்டத்தின் 50ஆம் பிரிவின் (1)ம் உட்பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட மாநிலக் கண்காணிப்புக் குழு ஆய்வு செய்து கண்காணிக்கும். மாநிலக் கண்காணிப்புக் குழுவின் கூட்டங்கள் குறைந்தது ஆறு மாதங்களுக்கொரு முறை நடத்தப்பட வேண்டும். குழு விரும்பினால், அதன் கூட்டங்களை எந்த நேரத்திலும் கூட்டலாம்.

(2) துணைவிதி (1) இன் நோக்கங்களுக்காக, குழு பின்வருவனவற்றைக் கோரலாம்:

(a) மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டங்களின் பதிருவுக்கள் மற்றும் தகவலைக் கோரலாம்;

(b) அவசியமெனில், கோருகின்ற அமைப்பினை விவாதம் செய்வதற்காக அழைக்கலாம்;

(c) அதன் முடிவுகளை செயல்படுத்துதல் குறித்த அறிக்கையைக் கோரலாம்.

(3) குழுவின் உறுப்பினர்கள், அரசுச் செயலாளர் பதவித்தரத்திற்கு இணையான அலுவலருக்கு பொருந்தக்கூடிய வீதத்தில் பயணப்படி, தினப்படி கிடைக்கப்பெறுவார்.

---

* அரசாணை (நிலை) எண். 302 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

** அரசாணை (நிலை) எண். 304 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாயம்–VIII.

நிலம் கையகப்படுத்துதல் ,மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு ஆணையம்.

28. நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு ஆணையத்தின் தலைமை அதிகாரி, பதிவாளர் மற்றும் ஏனைய பணியாளர்களின் பணி நிபந்தனைகள்:– (1) நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு ஆணையத்தின்* தலைமை அதிகாரியின் சம்பளம் மற்றும் ஏனைய பணி நிபந்தனைகள் பின்வருமாறு:–

(a) மாவட்ட நீதிபதியாக உள்ளவர் தலைமை அதிகாரியாக இருப்பாராயின் மாவட்ட நீதிபதி பதவியில் அவருக்கு பொருந்தத்தக்க தொடர்புடைய பணி விதிகளுக்கிணங்க ஏனைய பணி நிபந்தனைகளுடன் கூடிய சம்பளம் அவருக்கு தொடர்ந்து வழங்கப்படும்.

(b) தலைமை அதிகாரி ஓய்வு பெற்ற ஒரு மாவட்ட நீதிபதியாக இருப்பாராயின், அவருடைய சம்பளம் அவர் பணியில் இருந்த போது கடைசியாக பெற்ற சம்பளத்திலிருந்து அவ்வப்போது பெரும் ஓய்வூதியத்தை கழித்துவிட்டு வழங்கப்படும். ஆணையத்தின் தலைமை அதிகாரியாக பணியாற்றியதற்கென அவர் யாதொரு ஓய்வூதியத்தையும் பெற உரிமையுடையவர் அல்லர். மாவட்ட நீதிபதி பதவிக்குப் பொருந்தத்தக்க வேண்டிய மாறுதல்களுடன் ஏனைய பணி நிபந்தனைகள் அவருக்கு பொருந்தும்.

(c) தலைமை அதிகாரி ஒரு வழக்குரைஞராக இருப்பாராயின், அவருடைய சம்பளம் மற்றும் ஏனைய படிகள் ஒரு மாவட்ட நீதிபதிக்கு (நுழைவுநிலை) பொருந்தத்தக்க குறைந்தளவு சம்பள வீதத்தில் சம்பளம் மற்றும் ஏனைய படிகள் அவருக்கு வழங்கவேண்டும். யாதொரு ஓய்வூதியத்தையும் பெற அவர் உரிமையுடையவர் அல்லர். மாவட்ட நீதிபதி பதவிக்குப் பொருந்தத்தக்க ஏனைய பணி நிபந்தனைகள் வேண்டிய மாறுதல்களுடன் அவருக்கு பொருந்தும்.

(2) ஆணையத்தின் பதிவாளர் மற்றும் ஏனைய பணியாளர்கள் இதர அரசு துறைகளிலிருந்து வேற்றுப் பணிக்கு அனுப்புவதன் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவர். அவர்களுடைய சம்பளம், படிகள் மற்றும் ஏனைய பணி நிபந்தனைகள் அவரது பணி தொடர்பான தாய்துறையின் விதிகளின்படி தொடரவேண்டும்.

29. பயன்படுத்தப்படாத நிலத்தை திரும்பப் பெறுவதற்கான நடைமுறை:–

(1) இச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட யாதொரு நிலமும், தேவைப்படுகின்ற அமைப்பால் நிலம் கையகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாமல் இருப்பின், மாவட்ட ஆட்சியர் முதல் நேர்வாக வேறு எந்த பொது நோக்கத்திற்காகவும் அந்த நிலம் தேவைப்படுகின்றதா என்பதை ஆராய வேண்டும். அத்தகைய நிலம் வேறு எந்த நோக்கத்திற்காகவும் தேவைப்படும் என்று அவர் மனநிறைவு அடைந்தால், அவர் அதை உறுதிப்படுத்த வேண்டும் மற்றும் காலியாக உள்ள அரசின் சொந்த, கைவிடப்பட்ட, கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாத, வரி செலுத்தப்படாத நிலங்களை உற்பத்திப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம் என்று மாநில அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டும்.

(2) நிலம் கையகப்படுத்தப்பட்ட அமைப்பிற்கு, அந்நிலத்தை திரும்ப பெறுவதற்கான ஒரு அறிவிப்பை மாவட்ட ஆட்சியர் வெளியிடவேண்டும். மாநில அரசு, அந்த அமைப்பிற்கு ஒரு வாய்ப்பைப் வழங்கிய பிறகு அது பொருந்தக் கூடியதாக இருந்தால் அத்தகைய நிலத்தை அந்த அமைப்பிடமிருந்து திரும்ப பெற்று நிலவங்கியிடம் வழங்குவதற்கான ஆணையை எழுத்து மூலமாக வழங்க வேண்டும்.

(3) அத்தகைய எழுத்துப் பூர்வமான உத்தரவு வழங்கிய பின்னர், மாவட்ட ஆட்சியர் அந்த அமைப்பிடமிருந்து நிலத்தை உடைமை எடுத்து, அதனை நிலவங்கியிடம் ஒப்படைக்க வேண்டும்.

(4) கையகப்படுத்தப்பட்ட நிலத்தை கோருகின்ற அமைப்பு மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கப்படாமல் இருக்குமாயின், கோருகின்ற அமைப்பிற்கு முன்அறிவிப்பு வழங்கப்பட்ட பிறகு நிலத்தின் உடைமையை பெறுவதற்கு செயல் நீதிபதி மற்றும் காவல்துறையின் உதவியை அவர் பெறவேண்டும்.

30. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வெளியீடு:– (1) மேற்சொன்ன சட்டத்தின் தொடர்புடைய பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள பொது அறிவிப்பு முறைகளுடன் சேர்த்து 4 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ் SIA ஆய்வினை தொடங்குதல் குறித்த அறிவிப்பும், 8 ஆம் பிரிவைச் சேர்ந்த (2)ம் உட்பிரிவின் கீழ் நிலம் கையகப்படுத்துதல் குறித்த உரிய அரசின்** முடிவும், 11ஆம் பிரிவைச் சேர்ந்த (1)ம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட முதல்நிலை அறிவிக்கையையும், 19ஆம் பிரிவைச் சேர்ந்த (1)ம் உட்பிரிவின் கீழ் நிலம் கையகப்படுத்துவதற்கான விளம்பல் அறிவிக்கையும் சென்னை மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் சம்மந்தப்பட்ட கிராம நிருவாக அலுவலரின் அலுவலகத்தில் உள்ள அறிவிப்புப் பலகையிலும், சென்னை மாவட்டத்தை பொறுத்தமட்டில் சம்மந்தப்பட்ட மாநகராட்சி மண்டல அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையிலும் ஒட்டப்பட வேண்டும்.

(2) SIA அறிக்கை மற்றும் 6ஆம் பிரிவைச் சேர்ந்த (1)ம் உட்பிரிவின் கீழ் SIMP, 7ஆம் பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவின் கீழ் வல்லுநர் குழுவின் பரிந்துரைகள், 18ஆம் பிரிவின் கீழ் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டம் இவற்றை பொறுத்தமட்டில் சென்னை மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் சம்மந்தப்பட்ட கிராம நிருவாக அலுவலரின் அலுவலகத்திலும், சென்னை மாவட்டத்தை பொறுத்தமட்டில் சம்மந்தப்பட்ட மாநகராட்சி மண்டல அலுவலகங்களிலும் அவை வைக்கப்பட வேண்டும். மேலும் அவ்வலுவலகங்களின் அறிவிப்புப் பலகைகளில், உள்ளபடியான அறிக்கைகளின் நகல்கள் ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.

31. இந்த விதிகள் பற்றிய விளக்கம்:– இந்த விதிகளின் விளக்கம் தொடர்பாக ஏதெனும் ஐயப்பாடு எழுமாயின், அதனை மாநில அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டும். அவர்களது முடிவே இறுதியானது ஆகும்.

டாக்டர் சந்தர மோகன். பி,
அரசு செயலாளர்.

* அரசாணை (நிலை) எண். 305 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

** அரசாணை (நிலை) எண். 299 வ(ம)பே.மே. துறை, நாள் 20–9–2017–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

படிவம் – I

[விதி 3(1)ஐக் காண்க]

நிலம் கையகப்படுத்துவதற்கான கோரிக்கை

அனுப்புநர்:

கோருகின்ற அமைப்பின் ஏற்பளிக்கப் பெற்ற கையொப்பக்காரர்

(பதவி மற்றும் முழு முகவரி)

பெறுநர்:

1. மாவட்ட ஆட்சியர்,
   ---------- மாவட்டம்.

2. ஆணையர்,
   மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு,
   தமிழ்நாடு.

_____ திட்டப்பணி / செயல் நோக்கத்திற்காக _____ ஏக்கர்(கள்) நிலத்தை கையகப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. கையகப்படுத்தப்பட வேண்டிய நிலத்தை காட்டுகின்ற ஒருங்கிணைந்த திட்ட வரைப்படத்தின் மூன்று நகல்களுடன் இணைப்பு I, II, III – இல், அளிக்கப்பட்டுள்ளன.

2013–ஆம் ஆண்டு, நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், வகை செய்யப்பட்டவாறாக மற்றும் 2017 ஆம் ஆண்டு, நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வினை பெறுவதற்கான உரிமை விதிகளில் வகை செய்யப்பட்டவாறாக, சமூக தாக்கம் மதிப்பீட்டாய்வின் செலவுத் தொகை உட்பட நிலம் கையகப்படுத்துவதற்கு தேவையான செலவினம் உங்களால் கோரப்படும்போது, உங்களது அலுவலகத்தில் வைப்பீடு செய்யப்படும். கையகப்படுத்தப்பட வேண்டிய நிலத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டன என்றும் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு / குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் தேவையான அனைத்து தகவல் மற்றும் நிதியுதவி வழங்கப்படும் என சான்றளிக்கப்படுகிறது.

கோருகின்ற அமைப்பின்
ஏற்பளிக்கப் பெற்ற கையொப்பக்காரர்

Verified RegEstate™

இணைப்பு – I

திட்டப் பணியின் பெயர்:–

1. கிராமத்தின் பெயர்
2. வட்டத்தின் பெயர்
3. நகராட்சி, மாநகராட்சி, கிராம ஊராட்சியின் பெயர்
4. மாவட்டத்தின் பெயர்
5. கோரப்படும் நில அளவை எண்கள்
6. ஒவ்வொரு நில அளவை எண்ணில் கையகப்படுத்துவதற்காக கருதப்பட்ட நிலத்தின் துல்லியமான பரப்பளவு (தொடர்புடைய களதிட்ட வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது.)
7. கோரப்படுகின்ற மொத்த பரப்பளவு (ஏக்கரில் / எக்டரில் / சதுர மீட்டரில்)
8. கையகப்படுத்துவதற்கு கருதப்பட்ட நிலங்களின் வகைப்பாடு.

   அ. நன்செய்

   ஆ. புன்செய்

   இ. மானவாரி

   ஈ. கிராமமனை (நத்தம்)

   உ. புறம்போக்கு

9. கோரப்படும் பகுதியின் எல்லைகள்

   கிழக்கு–

   மேற்கு–

   வடக்கு–

   தெற்கு –

10. வேளாண் மற்றும் பலவகை பயிர்கள் பயிரிடப்பட்ட பாசன நிலத்தின் பரப்பு
11. வேளாண் மற்றும் பலவகை பயிர்கள் பயிரிடப்பட்ட நிலத்தை சேர்ப்பதற்கான காரணங்கள் ஏதேனுமிருந்தால்.
12. கட்டடங்கள், மற்ற கட்டமைப்புகள், நீர்த் தொட்டிகள், கிணறுகள், மரங்கள் முதலிய விவரங்கள்.
13. நிலம் கையகப்படுத்துவதற்காக மத கட்டடம், இடுகாடு, கல்லறை போன்று ஏதேனுமிருப்பின் அவற்றை சேர்ப்பதற்கான காரணங்கள்
14. சம்பந்தப்பட்ட அலுவலர்களால் செய்யப்பட்ட கூட்டாய்வு
15. நிலம் கையகப்படுத்துவதற்கான கருத்துரை (ஏதேனுமிருப்பின்)

கோருகின்ற அமைப்பின்
ஏற்பளிக்கப் பெற்ற கையொப்பக்காரர்

Verified RealEstate ™

இணைப்பு – II

திட்டப் பணியின் பெயர்:

1. துறை அல்லது அரசு, நிறுவனம், உள்ளக ஆணையம் அல்லது நிறுவனத்தின் பெயர்;
2. கோரிக்கையில் கையொப்பமிடுவதற்கு ஏற்பளிக்கப் பெற்ற, கோருகின்ற அமைப்பின் பிரதிநிதியின் அலுவலக முறை பதவிப் பெயர்;
3. நிலம் கையகப்படுத்துவதற்கான செயல் நோக்கம் (விரிவாக):–
4. அரசு அல்லது துறையால், அதன் சொந்த பயன்பாடு மற்றும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளதா ?
5. இச்சட்டத்தின் 2(1)(a) முதல் 2(1)(f) வரையில் உள்ள பிரிவின் கீழ் கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளதா ?
6. இச்சட்டத்தின் 2(1)(a) அல்லது (b) பிரிவின் கீழ் கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளதா ?
7. இச்சட்டத்தின் பிரிவு 3(c)–ன் கீழ் குறிப்பிடப்பட்டவாறாக எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன ?
8. (i) இச்சட்டத்தின் 40ஆம் பிரிவின் கீழ் கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளதா ?

   (ii) ஆம் எனில், என்ன காரணம் ?
9. (i) கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம், தனியார் பேச்சுவார்த்தை வாயிலாக, உரிமையாளர்களிடமிருந்து ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதா ?

   (ii) ஆம் எனில், எந்த நாளில் மற்றும் என்ன வரையறைகளின் கீழ் ? (தயவு செய்து பேச்சுவார்த்தை வரையறைகளை சுருக்கமாக குறிப்பிட்டு அதன் நகலை இணைக்கவும்)
10. திட்டப்பணிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் (நகல் இணைக்கப்பட வேண்டும்)
11. திட்டப்பணிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட நாளிலிருந்து 6 வாரங்களுக்கு பின்னர் கோரிக்கை அளிக்கப்பட்டிருப்பின், கோரிக்கை அளிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணங்கள்
12. எந்த காலஅளவிற்குள் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது.

கோருகின்ற அமைப்பின்
ஏற்பளிக்கப் பெற்ற கையொப்பக்காரர்

இணைப்பு– III

கோருகின்ற அமைப்பால் நிலம் கையகப்படுத்துவதற்கு கோரிக்கையுடன்

அளிக்கப்பட வேண்டிய சான்றளிப்பு

திட்டப் பணியின் பெயர்:

1. கையகப்படுத்தப்படுவதற்கு கோரப்படுகின்ற நிலத்திற்கான திட்டப்பணிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது. (காண்க: இச்சட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்துவதற்காக _____ஆம் நாளிட்ட துறையின் கடித எண். _____)
2. திட்டப் பணிக்கான மதிப்பீட்டுச் செலவு ரூ._____ மற்றும் தேவையான வரவு செலவு திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளதுடன், நிலத்தை கையகப்படுத்துவதற்கும் நிதிகள் உள்ளன.
3. நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு ஆணையம் / உயர்நீதிமன்றம் / உச்சநீதிமன்றத்தின், தீர்ப்பின்படி, இழப்பீடு மறுநிர்ணயம் செய்யும் நேர்வில், முழுத்தொகையையும் செலுத்துமாறு மாவட்ட ஆட்சியாளரால் தெரிவிக்கப்படும்போதெல்லாம், அவ்வாறு செய்வதாக துறை உறுதியளிக்கிறது.

கோருகின்ற அமைப்பின்
ஏற்பளிக்கப் பெற்ற கையொப்பக்காரர்

Verified RedEstate ™

படிவம் – II

[12(e) ஆம் விதியைக் காண்க]

பாதிக்கப்பட்ட குடும்பத்தினரால் முன்னரே எழுதப்பட்ட அனுமதி / உறுதிமொழி படிவம்

கையொப்பதாரரின் புகைப்படம்

வரிசை எண்.	சம்பந்தப்பட்ட நபரின் விவரங்கள்		
(1)	யாருடைய பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த நபரின் (நபர்களின்) பெயர்:		
(2)	கணவன்/ மனைவியின் பெயர்:		
(3)	தகப்பனார் / தாயாரின் பெயர்:		
(4)	முகவரி:		
(5)	கிராமம் / குக்கிராமம்:		
(6)	கிராம ஊராட்சி / பேரூராட்சி/ நகராட்சி/ மாநகராட்சி:		
(7)	வட்டம்		
(8)	மாவட்டம்		
(9)	குடும்பத்திலுள்ள ஏனைய உறுப்பினர்களின் பெயர் மற்றும் வயது (குழந்தை மற்றும் உரியவயதடைந்த சார்ந்திருப்போர் உட்பட) :		
(10)	சொந்தமாக உள்ள நிலத்தின் அளவு:		
(11)	கையகப்படுத்துதலின் கீழான பரப்பு:		
(12)	மனை எண்:		
(13)	உரிமத்திற்கான ஆவணம்:		
(14)	பிரச்சனைக்குரிய நிலங்கள் (ஏதேனும் இருப்பின்)		
(15)	பட்டா/ குத்தகை / மானியங்கள் (ஏதேனும் இருப்பின்):		
(16)	வேறு ஏதேனும் உரிமை, வாடகை உட்பட ஏதேனும் இருப்பின்		
(17)	அரசால் கையகப்படுத்தப்படவுள்ள என்னுடைய நிலம் தொடர்பாக, பின்வருவனவற்றினை குறிப்பிடுவதற்கு நான் விரும்புகிறேன் (பின்வருவற்றில் ஒன்றினை தயவு செய்து வட்டமிடவும்)		
	(i) இந்த ஒப்புதல் படிவத்தில் உள்ள விவரங்களை நான் படித்துள்ளதை/ படிக்கப்பட்டவை _____ மொழியில் எனக்கு விவரிக்கப்பட்டன.	ஆம்	இல்லை
	(ii) இந்த கையகப்படுத்துதலுக்கு நான் ஒப்புகையளிக்கிறேன்	ஆம்	இல்லை
		பாதிக்கப்பட்ட குடும்பத்தின் (குடும்பங்களின்) கையொப்பம் / பெருவிரல்ரேகை பதிவு மற்றும் நாள்	
(18)	கோருகின்ற அமைப்பினால் ஒப்புக்கொள்ளப்பட்ட வரையறை நிபந்தனைகள், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்துதல், இழப்பீடுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் குறித்து உள்ளூர் மொழியில் விளக்கப்படவேண்டும். இத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.		
		கையொப்பமிட்ட படிவத்தைப் பெறுகிற மாவட்ட நியமன அலுவலரின் கையொப்பம் மற்றும் நாள்	
குறிப்பு	எந்தவொரு நபரும் ஒப்புதலுக்கு மறுப்பதினாலோ அல்லது இந்த படிவத்திலுள்ளவாறு அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை என்பதினாலோ அந்த நபரை அச்சுறுத்துவதோ அல்லது அவர்களுக்கு ஏதேனும் தீங்கு நேரிடுவதற்கு காரணமாக அமைவது சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகும். இது அவர்களுடைய பண இழப்புக்கு காரணமான ஏதேனும் அச்சுறுத்தல் அல்லது செயல், அவர்களுக்கு உடல் ரீதியான காயங்கள் அல்லது அவருடைய குடும்பத்தினருக்கு நேரிடக்கூடிய தீங்குகள் ஆகியவற்றினை உள்ளடக்கியதாகும். அவ்வாறு அச்சுறுத்தப்பட்டால் இப்படிவம் செல்லாததாக கருதப்படும்.		

சாட்சிகளின் கையொப்பம்:

Verified RealEstate ™

படிவம்– III

(12(ற) ஆம் விதியைக் காண்க)

கிராம சபைத் தீர்மானத்திற்கான படிவம்

_____ மாவட்டத்தின் _____ வட்டத்தைச் சேர்ந்த _____ ஊராட்சிக்குள் உள்ள _____கிராம சபையின் கீழே கையெழுத்திட்டிருக்கும் உறுப்பினர்களாகிய நாங்கள், நிருவாகம் மற்றும் அதிகாரிகளால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பின்வரும் சான்றினை அளிக்கிறோம் எனத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தத் தகவல் முழுமையற்றதாகவோ அல்லது தவறானதாகவோ அல்லது யாதொரு அச்சுறுத்தல்கள், மோசடி அல்லது திரிக்கப்பட்ட தகவல்களின் மூலம் யாதொரு விருப்ப இசைவும் பெறப்பட்டிருப்பின், சட்டப்படி செல்லாததாகக் கருதப்பட வேண்டும். இதன் அடிப்படையில், பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கிய, _____திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தப்படுவதற்கு இந்த கிராம சபை இசைவு தெரிவிக்கிறது / இசைவு தெரிவிக்க மறுக்கிறது:

(a) _____ ஏக்கர் தனியார் நிலத்தைக் கையகப்படுத்துதல்*

(b) _____ ஏக்கர் அரசு நிலத்தைத் திட்டத்திற்காக நிலமாற்றம் செய்தல்*

(c) _____ ஏக்கர் வனப்பகுதியைத் திட்டத்திற்காக நிலமாற்றம் செய்தல்*

நிலம்கோரும் அமைப்பான _____(பெயரைக் குறிப்பிடவும்) ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் இழப்பீடு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியேற்றத்தின் பயன்கள் மற்றும் சமூகத் தாக்கத்தைத் தணிக்கும் நடவடிக்கைகளின் மீதான நிபந்தனைகளுக்கு நாங்கள் இசைவளிக்கிறோம்*/நாங்கள் இசைவளிக்கவில்லை.*

(* பொருந்தாதவற்றை அடித்து விடவும்).

யாதொரு விருப்ப இசைவும், குடியிருப்போர் அனைவருக்கும், அவர்கள் இதுவரை பயிரிட்டு வந்த வனப்பகுதி நிலத்திற்கான உரிமைகள் உட்பட, வனங்கள் மற்றும் வனப்பகுதி நிலங்கள் மீதான அவர்களது தனிநபர் மற்றும் சமூக உரிமைகளின் உரிமை, அவர்கள் பயன்படுத்தும் சிறு அளவிலான வன உற்பத்திப் பொருட்களின் அனைத்து வடிவங்களுக்குமான உடைமை உரிமைகள் மற்றும் அவர்களது சமுதாய வனப்பகுதிகளைப் பாதுகாக்கும் மற்றும் நிருவகிக்கும் உரிமைகள் ஆகியவை வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டது என்றும் கிராம சபை தெரிவிக்கிறது.

நாள் மற்றும் கிராம சபை உறுப்பினர்களின்
கையொப்பங்கள் / பெருவிரல் ரேகைப் பதிவுகள்

தீர்மானத்தினைப் பெறுவதற்கு
அதிகாரமளிக்கப்பட்ட மாவட்ட அலுவலரின் கையொப்பம் மற்றும் நாள்

Verified RealEstate

படிவம் – IV

(13(1) ஆம் விதியைக் காண்க)

முதல்நிலை அறிவிக்கை

எண். _____ **நாள்** _____

_____ மாவட்டத்தின் _____வட்டம் / வட்டாரத்தை (பொருந்துமாறு) சேர்ந்த _____கிராமத்தில் மொத்தம் _____ ஹெக்டேர் நிலம் _____எனப்படும் பொதுநலப் பயன்பாட்டிற்காகத் தேவைப்படுவதாக உரிய அரசு உத்தேசித்துள்ளதாலும், சமூகத்தாக்க மதிப்பீட்டு முகமையால் சமூகத்தாக்க மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு, 4ஆம் விதியின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு மாவட்ட ஆட்சியாளரால் ஏற்படுத்தப்பட்ட குழு ஒன்றின் மூலம் அறிக்கை அளிக்கப்பட்டது / முதனிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சமூகத்தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் / முதனிலை ஆய்வின் சுருக்கக் குறிப்பு பின்வருமாறு (சமூகத்தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் நகல் இணைக்கப்பட வேண்டும்):

_____ நிலம் கையகப்படுத்தப்படுவதன் காரணமாக மொத்தம் _____ (எண்ணிக்கையில்) குடும்பங்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளன. அவ்வாறு இடமாற்றம் செய்யப்படுவதற்கான காரணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு வழங்குவதற்காக _____ நிருவாகியாக நியமிக்கப்படுகிறார். எனவே, _____ மாவட்டத்தின் _____ வட்டத்தை / வட்டாரத்தை (பொருந்துமாறு) சேர்ந்த _____ கிராமத்தில், மேற்சொன்ன திட்டத்திற்காக, _____ ஹெக்டேர் பரப்பளவு கொண்ட, நிலப்பகுதி கையகப்படுத்தப்படவுள்ளது. அதன் விரிவான விவரங்கள் பின்வருகின்றன:

தொடர் எண்	நில அளவை எண்	நிலத்தின் வகை	கையகப் படுத்தப்பட உள்ள நிலத்தின் பரப்பளவு	எல்லைகள்				கட்டுமானங்கள்	மரங்கள்	நிலத்தின் மீது பற்று இருப்பவரின் பெயரும் முகவரியும்	பதிவு செய்து வைத்துள்ளவர்
(1)	(2)	(3)	(4)	(5)				(6)	(7)	(8)	(9)
				வ	கி	தெ	மே				

இந்த அறிவிக்கை, 2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 30/2013) 11(1) பிரிவின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் விதிமுறைகளின் கீழ் தொடர்புடைய அனைவருக்காகவும் வெளியிடப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் மற்றும்…… ஆகியோரால் யாதொரு வேலை நாட்களிலும் வேலை நேரங்களிலும் நிலத்தின் திட்டம் குறித்து ஆய்வு செய்யப்படலாம்.

மேற்சொன்ன சட்டத்தின் 12 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் வழங்கப்பட்டுள்ளவாறு, நிலத்தில் நுழைதல், யாதொரு நிலங்களை அளவெடுத்தல், அடிமண்ணை தோண்டுதல் அல்லது ஆழ்துளையிடுதல் மற்றும் இது தொடர்பான அனைத்து செயல்களையும் முறையாகச் செயல்படுத்த …….. அலுவலருக்கு மற்றும் அவரது பணியாளருக்கு அதிகாரமளிக்குமாறு அரசிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இச்சட்டத்தின் 11(4)ஆம் பிரிவின்கீழ், யாதொரு நபரும் நிலத்தை விற்பனை செய்தல் / வாங்குதல் போன்ற யாதொரு பரிமாற்றங்களில் ஈடுபடுதல் அல்லது பரிமாற்றங்கள் செய்தல் அல்லது மாவட்ட ஆட்சியரின் முன் அங்கீகாரம் இன்றி இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து யாதொரு வில்லங்கங்களையும் ஏற்படுத்த இயலாது.

கையகப்படுத்துதல் தொடர்பாக மறுப்புரை ஏதேனும், இருப்பின், இச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் (அறுபது நாட்களுக்குள்ளாக) பற்றுள்ளவர் அதனை, மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கலாம்.

* இச்சட்டத்தின் பிரிவு 40(1)ன்படி இந்திய இராணுவம் / தேசிய பாதுகாப்பு / இயற்கை பேரிடரால் ஏற்பட்ட அவசரநிலை / பிரிவு 40 (2) இன் வரம்பெல்லைக்கு உட்பட்டு நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு அவசரநிலை (பொருந்தாதவற்றை அடித்து விடவும்) போன்றவற்றிற்கு நிலம் தேவைப்படுமாயின் அதன் பொருட்டு அரசாணை எண்……நாள் ……ன்படி சமூகதாக்க மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளத் தேவையில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது. (பொருத்தமாக இருந்தால் மட்டுமே இப்பத்தி பயன்படுத்தப்படலாம்)

இணைப்பு: மேற்கண்டவாறு

இடம்:
நாள்: மாவட்டஆட்சியர்

* பொருந்தாதவற்றை அடித்துவிடவும்

Verified RealEstate

படிவம் – V

(14(1) ஆம் விதியைக் காண்க)

மாவட்ட ஆட்சியரின் அறிவிக்கை

எண்…….. நாள்……..

கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள, …… மாவட்டத்தின் …….. வட்டம் / வட்டாரத்தின் …….. கிராமத்தில் அமைந்துள்ள நிலம் தேவைப்பட்டுள்ள அல்லது தேவைப்படும் என கருதப்படுகின்றதால் 2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் கீழ் ……ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் ……..ஆம் பக்கத்திலுள்ள பாகம்–Iஇன் படி மாவட்ட ஆட்சியரால் இதனால் அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதற்கிணங்க இந்த நிலத்தில் உரிமையுடைய அனைத்து நபர்களும், மேற்சொன்ன நிலம் கையகப்படுத்துவது குறித்து அவர்களுடைய எழுத்துப்பூர்வமான மறுப்புரையை…….. ஏதேனுமிருப்பின் அதனை மேற்சொன்ன முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து அறுபது (60) நாட்களுக்குள்ளாக ……..க்கு முன்னர் அவர்களுடைய மறுப்புரைகளை தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உரிய நாளுக்குப் பின்னர் பெறப்பட்ட மறுப்புரை விவர அறிக்கைகள் அல்லது அனுப்புகின்ற நிலஉரிமையாளரின் விவரங்கள் தெளிவாக விவரிக்கப்படாமல் பெறப்படும் யாதொரு மறுப்புரை அறிக்கைகளும் உடனடியாக நிராகரிப்பதற்கு உட்பட்டதாகும்.

உரிய நாட்களுக்குள் பெறப்படும் மறுப்புரைகள் ஏதேனும் இருப்பின் …….. இடத்தில்…….. அன்று விசாரணை செய்யப்படும் போது, நேரடியாக ஆஜராவதற்கு அல்லது வழக்கறிஞர் மூலம் மற்றும் ஏதேனும் வாய்மொழியாக நிரூபணம் செய்வதற்கு அல்லது அவர்களுடைய மறுப்புரைகளுக்கு ஆதாரமான சான்றாவணங்களை அளிப்பதற்கு மறுப்புரையாளார் உரிமையுடையவராவார்.

அட்டவணை

தொடர் எண்	புல எண்	மொத்த பரப்பளவு ஹெக்டேரில்	கையகப்படுத்தும் பரப்பளவு ஹெக்டேரில்	நில உரிமையாளார்களின் பெயர் மற்றும் முகவரி / பதிவு செய்யப்பட்ட நில உரிமையாளர்	எல்லைகள்				மரங்கள், அமைப்புகள் ஏதேனுமிருப்பின் அதன் விவரங்கள்
					வ	கி	தெ	மே	
1	2	3	4	5	6				7

இடம்:
நாள்: மாவட்ட ஆட்சியர்

Verified © RealEstate

படிவம் – VI

(16ஆம் விதியைக் காண்க)

விளம்புகை

எண்:…….. நாள்:……..

பொதுத்தேவைக்காக, அதாவது …….. , …….. மாவட்டத்தில்……. வட்டத்தில்/ வட்டாரத்தில் (பொருந்தக் கூடியவாறு) உள்ள …….. கிராமத்தில் இருக்கும் மொத்தப் பரப்பளவான …… ஹெக்டேர் நிலம் தேவைப்படுகிறது என அரசு கருதுவதால், …….. மாவட்டத்தில் …… வட்டத்தில்/ வட்டாரத்தில் (பொருந்தக் கூடியவாறு) …….. கிராமத்தில் மேற்சொன்ன அரசுத் திட்டத்திற்காக கையகப்படுத்துதலின் கீழ் …….. ஹெக்டேர் நிலத்தில் அளவிடப்படும் ஒரு பகுதி நிலம் குறித்து விளம்புகை செய்வது குறித்தான விவரங்கள் பின்வருமாறு.

தொடர் எண்	நில அளவை எண்	உரிமை வகை	நிலத்தின் வகை	கையகப்படுத்தப்பட உள்ள நிலத்தின் பரப்பளவு (ஹெக்டேரில்)	நிலத்தின் மீது பற்றுள்ள நபரின் பெயரும் முகவரியும்	எல்லைகள்				மரங்கள்		கட்டுமானங்கள்	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)				(8)		(9)	
						வ	கி	தெ	மே	வகை	எண்ணிக்கை	வகை	தளப் பரப்பளவு

2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 30/2013) 15 ஆம் பிரிவின் கீழ் வகை செய்யப்பட்டவாறு பற்றுள்ள நபரின் மறுப்புரைகளைக் கேட்ட பின்னரும் உரிய விசாரணைக்குப் பின்னரும் இந்த விளம்புகை தயாரிக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதன் காரணமாக மறுகுடியமர்வுக்கு வாய்ப்பான குடும்பங்களின் எண்ணிக்கை …… இவர்களுக்கான மறுகுடியமர்வுப் பகுதியானது கண்டறியப்பட்டுள்ளது. அவை தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:–

–––––––––––––––– மாவட்டத்திலுள்ள ––––––––––– வட்டம் / வட்டாரத்திலுள்ள (பொருந்தக் கூடியவாறு)––––––––––– கிராமத்தின் ––––––––––– பரப்பளவு ஹெக்டேரில்)

கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் மேற்சொன்ன திட்டத்தின் நோக்கத்திற்காக கட்டுமான நிலையின் போது அத்தகைய நிலப்பரப்பை தோண்டும் போது (அ) அகற்றும் போது அல்லது பயன்படுத்தக் கூடிய சுரங்கங்கள் (அ) கனிமங்கள் நீங்கலாக, மேற்சொன்ன நிலப்பகுதியில் படிந்துள்ள நிலக்கரி, இரும்பு (அ) ஏனைய கனிமங்கள் தேவையில்லை.

யாதொரு வேலை நாட்களிலும் நிலம் கையகப்படுத்தும் அலுவலரின் …… அலுவலகத்தில் மற்றும் ––––––––– ல் திட்ட வரைபடத்தை பார்வையிடலாம்.

மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தினுடைய சுருக்கக் குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு: மேற்குறித்தவை

மாவட்ட ஆட்சியர்

Verified RealEstora ™

படிவம் – VII

(18 ஆம் விதியைக் காண்க)

நிலம் கையகப்படுத்துதல் தீர்ப்பாணை

நிலம் கையகப்படுத்துதல் கோப்பு எண்./ தீர்ப்பு எண். நாள்:

1. திட்டத்தின் பெயர்:

2. கையகப்படுத்தப்பட உள்ள நிலத்தின் விளம்புகை எண் மற்றும் நாள்

3. நிலத்தின் அமைவிடம் மற்றும் ஹெக்டேர்களில் அதன் அளவு, நில அளவை வரைப்படத்தில் உள்ள மனைகளின் எண்ணிக்கை, அந்த இடம் அமைந்துள்ள கிராமத்தில் மைல்கல் ஏதேனும் இருப்பின் அதன் எண்ணிக்கை.

4. நிலத்தின் வகை, அதாவது வறண்ட, பயிரிடப்பட்ட, பண்ணை வீடாக உள்ளது முதலியவை. பயிரிடப்பட்டிருப்பின் எவ்வாறு பயிரிடப்பட்டது, பாசனத்திற்கான ஆதாரம்;

5. நிலம் மற்றும் அதனுடைய தன்மை தொடர்பாக பற்று உள்ள நபர்களின் பெயர்கள்;

6. மரங்கள், கட்டிடங்கள் முதலியவை ஏதேனும் இருப்பின்; அவைகள் நீங்கலாக நிலத்திற்காக மட்டும் வழங்கப்பட்ட தொகை.

7. நிலம் சம்மந்தப்பட்ட குத்தகைதாரருக்கு அந்த இழப்பீடுதொகை நீங்கலாக இழப்பீடாக வழங்கப்பட்ட தொகை;

8. கணக்கீட்டு அடிப்படை:

9. மரங்கள், வீடுகள் அல்லது ஏதேனும் இதர அசையா சொத்துக்களுக்காக வழங்கப்பட்ட தொகை;

10. பயிர்களுக்காக வழங்கப்பட்ட தொகை;

11. பிரிவு 30(3) இன் கீழ் சந்தை மதிப்பின் அடிப்படையில் கூடுதல் இழப்பீடு;

12. மத்திய சட்டம் 30/2013 பிரிவு 28 இன் கீழ் இழப்பீடுகள்;

13. பிரிவு 30(1) இன் கீழ் கருணைத் தொகை;

14.மொத்த தொகை;

தொடர் எண்	இழப்பீடு பகிர்ந்தளிக்கப் பட்டத்தற்கான நிலப்பகுதி (ஹெக்டேர்களில்)	அளவை எண். எல்லைகள்				உரிமை கோரியவர்களின் பெயர்	மெய்ப்பிப்பதற்காக அளிக்கப்பட்ட ஆவணம்	ஒவ்வொன்றுக்கும் செலுத்தப்பட்ட தொகை	வங்கி கணக்கு எண்.	குறிப் புரை கள்
(1)	(2)	(3)				(4)	(5)	(6)	(7)	(8)
		வ	தெ	கி	மே					

15. மத்திய சட்டம் 30/2013 பிரிவு 38(1) மற்றும் 40(1)இன் கீழ் உடைமை உரிமை எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் ;

16. பிரிவு 40(1) இன் கீழ், இருப்பின், அவ்வாறு அதிகாரமளிக்கும் அரசாணையின் எண் மற்றும் நாள்.

நாள் கையொப்பம்
நிலம் கையகப்படுத்தும் அலுவலர்

Verified RealEstate ™

படிவம் - VIII

(18 ஆம் விதியைக் காண்க)

மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான தீர்ப்பாணை

நிலம் கையகப்படுத்துதல் கோப்பு எண்./ தீர்ப்பு எண். நாள்:

1. திட்டத்தின் பெயர்:
2. கையகப்படுத்தப்பட உள்ள நிலத்தின் விளம்புகை எண் மற்றும் நாள்.
3. நிலத்தின் அமைவிடம் மற்றும் ஹெக்டேர்களில் அதன் அளவு, நில அளவை வரைப்படத்தில் உள்ள மனைகளின் எண்ணிக்கை, அந்த இடம் அமைந்துள்ள கிராமத்தில் மைல்கல் ஏதேனும் இருப்பின் அதன் எண்ணிக்கை.
4. வீடுகள், போக்குவரத்துச் செலவு, வீட்டு வசதி படிகள், ஆண்டுத் தொகை, வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை மானியம், கால்நடை கொட்டகை, பெட்டிக்கடை, ஒருமுறை மறுகுடியமர்வுக்கான படிகள், முதலியனவற்றிற்கான விளக்கம்.
5. நிலத்தின் மீது பற்றுள்ள நபர்களின் பெயர் / பெயர்கள் மற்றும் முறையே அவர்களது மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான கோரிக்கையின் தன்மை.
6. இழப்பீட்டுத் தொகை பகிர்ந்தளிப்பு (ஹெக்டேர்களில்)

தொடர் எண்	உரிமை கோரியவர்கள்/ பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெயர்	மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான உரிமைகள்	வங்கி கணக்கு எண்	ஒவ்வொரு வருக்கும் / பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கும் செலுத்தப்பட்ட தொகை	பணம் சாராத வரம்பு	குறிப் புரைகள்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
		1. ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய வீடு 2. ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய நிலம் 3. மேம்பாடடைந்த நிலத்தை வழங்குதல் 4.ஆண்டுத் தொகை /வேலைவாய்ப்பு 5. ஊக்கத் தொகை மானியம் 6. போக்குவரத்து செலவு / வீட்டு வசதிபடிகள் 7. கால்நடை கொட்டகை / பெட்டிக்கடை 8. கலைஞர்கள் / சிறுவணிகர்கள் / ஏனைய சிலருக்கு ஒருமுறை மானியம் வழங்கல் 9. மீன்பிடி உரிமைகள் 10. ஒருமுறை மறுகுடியமர்வுக்கான படிகள் 11. முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம்				

ஆட்சியர்
மாவட்டம்:

டாக்டர் சந்தர மோகன். பி
அரசு செயலாளர்.

Verified by RedEstate ™

NOTIFICATIONS

[G.O.(Ms) No.299, Revenue & Disaster Management (LA-I(1), dated 20th September 2017,
புரட்டாசி 4, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048]

No. SRO A-41(c-2)/2017.

Under the proviso to clause (e) of section 3 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013), the Governor of Tamil Nadu hereby notifies forty acres as the area, not exceeding which the Collector shall be deemed to be the appropriate Government in relation to acquisition of land in respect of a Public purpose in the respective District.

[G.O.(Ms) No.300, Revenue & Disaster Management (LA-I(1), dated 20th September 2017,
புரட்டாசி 4, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048]

No. SRO A-41(c-3)/2017.

Under sub-section (2) of section 26 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013) read with the provisions against Serial Number 2 of the First Schedule to the said Act, the Governor of Tamil Nadu hereby notifies the factor by which the market value shall be multiplied in case the project is situated in rural areas, as specified in the Table below:

THE TABLE

Sl. No.	*Distance of the Project from Urban Areas*	*Factor by which the market vallue to be multiplied*
(1)	*(2)*	*(3)*
1.	Within 30 Kilometres	1.25
2.	Beyond 30 Kilometres and within 50 Kilometers	1.5
3.	Beyond 50 Kilometres	2.00

[G.O.(Ms) No.301, Revenue & Disaster Management (LA-I(1), dated 20th September 2017,
புரட்டாசி 4, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048]

No. SRO A-41(c-4)/2017.

In exercise of the powers conferred by sub- sections (2) and (4) of Section 10 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013, (Central Act 30 of 2013) the Governor of Tamil Nadu hereby notifies that the acquisition of irrigated multi-cropped land or agricultural land in any district or the entire State, shall, in no case exceed twenty percent of the total extent of irrigated multi–cropped land or twenty percent of the total net sown area of agricultural land respectively , in aggregate for all projects in any district or the entire State.

[G.O.(Ms) No.302, Revenue & Disaster Management (LA-I(1), dated 20th September 2017,
புரட்டாசி 4, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048]

No. SRO A-41(c-5)/2017.

In exercise of the powers conferred by sub-section (1) of section 43 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013), the Governor of Tamil Nadu hereby appoints the Revenue Divisional Officer of every revenue division in the State to be the Administrator for Rehabilitation and Resettlement, in respect of the projects located within the revenue division, where the appropriate Government is satisfied that there is likely to be involuntary displacement of persons due to acquisition of land.

Verified © RedEstate

[G.O.(Ms) No.303, Revenue & Disaster Management (LA-I(1), dated 20th September 2017,
புரட்டாசி 4, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048]

No. SRO A-41(c-6)/2017.

Under sub - section (1) of section 46 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013), the Governor of Tamil Nadu hereby notifies that in cases of purchase of land, equal to or more than 2500 acres in rural areas or equal to or more than 1250 acres in urban areas, by persons other than specified persons through private negotiation as limits for application of the provisions relating to rehabilitation and resettlement contemplated under the said Act.

[G.O.(Ms) No.304, Revenue & Disaster Management (LA-I(1), dated 20th September 2017,
புரட்டாசி 4, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048]

No. SRO A-41(c-7)/2017.

In exercise of the powers conferred by sub - section (1) of Section 44 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013), the Governor of Tamil Nadu hereby appoints the Commissioner of Land Administration, Government of Tamil Nadu to be the Commissioner of Rehabilitation and Resettlement.

[G.O.(Ms) No.305, Revenue & Disaster Management (LA-I(1), dated 20th September 2017,
புரட்டாசி 4, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048]

No. SRO A-41(c-8)/2017.

In exercise of the powers conferred by section 51 and sub-section(1) of section 52 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013, (Central Act 30 of 2013), the Governor of Tamil Nadu, in consultation with the Chief Justice of the High Court of Madras hereby establishes the Authorities specified in column (3) of the Table below as the Land Acquisition, Rehabilitation and Resettlement Authority for areas specified in the corresponding entries in column (2) thereof within which the said Authority shall exercise jurisdiction and appoints the judicial officers specified in the corresponding entries in column (4) thereof as the Presiding Officers of the respective Authorities :—

THE TABLE

Serial No.	*District of Jurisdiction*	*Name of the Authority*	*Name of the Presiding Officer*
(1)	(2)	(3)	(4)
1	Chennai	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Chennai	Principal Judge, City Civil Court, Chennai
2	Ariyalur	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Ariyalur	Principal District Judge, Ariyalur
3	Coimbatore	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Coimbatore	Principal District Judge, Coimbatore
4	Cuddalore	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Cuddalore	Principal District Judge, Cuddalore
5	Dharmapuri	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Dharmapuri	Principal District Judge, Dharmapuri
6	Dindigul	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Dindigul	Principal District Judge, Dindigul
7	Erode	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Erode	Principal District Judge, Erode

Serial No.	*District of Jurisdiction*	*Name of the Authority*	*Name of the Presiding Officer*
(1)	(2)	(3)	(4)
8	Kancheepuram District	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Kancheepuram District	Principal District Judge, Kancheepuram District at Chengalpattu
9	Kanniyakumari District	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Kanniyakumari District	District Judge, Kanniyakumari District at Nagercoil
10	Karur	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Karur	District Judge, Karur
11	Krishnagiri	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Krishnagiri	Principal District Judge, Krishnagiri
12	Madurai	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Madurai	Principal District Judge, Madurai
13	Nagapattinam	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Nagapattinam	District Judge, Nagapattinam
14	Namakkal	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Namakkal	Principal District Judge, Namakkal
15	Perambalur	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Perambalur	Principal District Judge, Perambalur
16	Pudukkottai	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Pudukkottai	Principal District Judge, Pudukkottai
17	Ramanathapuram	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Ramanathapuram	Principal District Judge, Ramanathapuram
18	Salem	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Salem	Principal District Judge, Salem
19	Sivagangai	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Sivagangai	District Judge, Sivagangai
20	Thanjavur	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Thanjavur	Principal District Judge, Thanjavur
21	The Nilgiris District	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, The Nilgiris District	District Judge-cum-Chief Judicial Magistrate, The Nilgiris District at Udhagamandalam
22	Theni	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Theni	Principal District Judge, Theni
23	Thoothukudi	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Thoothukudi	Principal District Judge, Thoothukudi

Verified RedEstate™

Serial No.	*District of Jurisdiction*	*Name of the Authority*	*Name of the Presiding Officer*
(1)	(2)	(3)	(4)
24	Tiruchirappalli	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Tiruchirappalli	Principal District Judge, Tiruchirappalli
25	Tirunelveli	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Tirunelveli	Principal District Judge, Tirunelveli
26	Tiruppur	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Tiruppur	Principal District Judge, Tiruppur
27	Tiruvallur	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Tiruvallur	Principal District Judge, Tiruvallur
28	Tiruvannamalai	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Tiruvannamalai	District Judge, Tiruvannamalai
29	Tiruvarur	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Tiruvarur	District Judge, Tiruvarur
30	Vellore	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Vellore	Principal District Judge, Vellore
31	Villupuram	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Villupuram	Principal District Judge, Villupuram
32	Virudhunagar District	Land Acquisition, Rehabilitation and Resettlement Authority, Virudhunagar District	Principal District Judge, Virudhunagar District at Srivilliputhur

DR. CHANDRA MOHAN. B,
Secretary to Government.

[[

Verified © RedEstate™

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU